
# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மிக சிந்திப்பு ஏடு

இதழ் - 05

2013



# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தின் சேவைகளும் பணிகளும்

- பிரதி ஞாயிறு தோறும் அன்னதானம் வழங்குதல்.
- மஹோற்சவ காலங்களில் அன்னதானம் வழங்குதல்
- ஞாயிற்றுக்கிழமைகளில் ஆன்மிக நிகழ்வுகள் நடாத்தல்.
- முதியோர் இல்லம் அமைத்து வருதல்.
- சமய கலாசார நிகழ்வுகளுக்காக மண்டப வசதிகள் செய்து கொடுத்தல்.
- திருமண சுபமுகூர்த்தங்களுக்கு மண்டபமும் உணவு, உபசார நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்தல்.
- மாணவர்கள், முதியோர்களுக்கான பொருள் உதவி வழங்கல் போன்றவை குறிப்பிடத்தக்கவை.
- நேர்த்திக் கடன், அன்னதானப் பணிகள் செய்யவிரும்புபவர்கள் மற்றும் உதவி செய்ய விரும்புபவர்களும் ஆச்சிரமத்துடன் தொடர்புகொள்ள முடியும்.


உங்கள் தொடர்புகளுக்கு :
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
பெரியாழ்வார் ஆச்சிரமம்
வை.ஆனந்தராசா
021 321 4769,
077 8933528

உ
ஸ்ரீ ராம ஜெயம்

# சக்கரம்

நலை இலக்கிய ஆன்மிக சிந்திப்பு ஏடு

இதழ் – 05 – 2013


ஆசிரியர்
வை.நவதரன்

துணை ஆசிரியர்
க.அருட்செல்வன்

ஆலோசகர்
பண்டிதர் பொன் சுகந்தன்

உருவம் கொடுத்தோர்
பா.மணிக்குமார்
ஆ.ஜெயராசா
கு.விக்னேஸ்வரன்
த.கமலசுதர்சன்
ப.பிரதீபன்
இ.அகிலிஸ்வரன்
லோகிதா
அன்பரசி



தொடர்புகளுக்கு:

**சக்கரம்**

பெரியாழ்வார் ஆச்சிரமம்
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்
Email: chakkarameditor@gmail.com
T.P: 0773463358


## உள்ளே....


| | |
|---|---|
| கீதை காட்டிய பாதை | 04 |
| துளசிச்செடியும் விஞ்ஞானமும் | 08 |
| ஏன் அழுதான் | 12 |
| பத்தொன்பதாம் நூற்றாண்டில்.. | 15 |
| இதண்டி வரும் இதண்டு | 24 |
| பெரியாழ்வார் பெருமை | 27 |
| பக்தி | 34 |
| வரம்தரும் வல்லிபுரம் | 38 |
| அவதாரங்களும் யுகங்களும் | 40 |
| இந்துமதமும் மதமாற்றமும் | 41 |
| விநாயகரின் திருஅவதாரங்கள் | 44 |

# சக்கரம்

கலை இலக்கிய ஆன்மீக சிந்திப்பு ஏடு


## பழமை மறந்த சனங்கள்

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக நம்மோடு ஒன்றிவந்த நம் வாழ்வியல் முறை, பண்பாடு, பழக்கவழக்கங்கள், வழிபாட்டு முறைகள், மதத் தொன்மைகள் யாவும் தம்தம் தன்மைகளை இழந்து அழிவுப் பாதைகளையே பற்றிச் செல்வதனை தரிசிக்கும் போது உள்ளம் அழுகிறது.

அன்று மனித சமூகம் அனைத்து வளங்களையும் தமதாக்கிக் கொள்வதற்கு தம்முடைய இஸ்ட தெய்வங்களை தரிசித்து அனைத்து வளங்களையும் தம்வசமாக்கி கொண்டார்கள்./ கொள்வார்கள்.

இன்றைய நவலோகத்தில் மனிதன் தன் வாழ்வியல் கூறுகளை நனையவிட்டு நனைந்த ஆடையுடன் மாற்றாடையின்றி அலைந்து திரிகின்றான். இவர்களுக்கு புதியது இல்லை என்றால் அவர்களால் வாழமுடியாத உணர்வினைத் தமதாக்கிக் கொள்கிறார்கள். மூக்கைப் பொத்தினால் சுவாசிக்க முடியாதவர்களாக மனித உலகம் உலாவி வருகின்றது.

நவீனத்தில் நனைந்த மனிதங்கள் நல்லவை நிகழும் நேரங்களில் கூட நவீனத் தெய்வங்களை ஓசை மூலம்/ விம்பங்கள் மூலம் தரிசிக்க முனைகின்றனர்.

கருணைமிக்க கனவான்களே! தினமும் ஆலய தரிசனம் செய்யாவிட்டாலும் நல்ல காரியங்கள், சடங்குகள், நிகழ்வுகள் இடம்பெறும் காலங்களிலாவதுகூட ஆலயம் சென்று பூசித்துவருவதை கடைப்பிடித்துப் பாருங்கள். இத் தன்மையினை/ உணர்வினை உங்கள் / எங்கள் பிள்ளைகள் மறந்துவிடுவார்கள் போல் தெரிகிறது. உங்கள்/ எங்கள் பிள்ளைகளையும் நல்லதொரு வாழ்வியல் முறைக்கு இட்டுச் செல்வதற்கு வழிசமைத்து அவ்வழியினூடே அவர்களது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பித்து வையுங்கள்.

நன்றி

ஆசிரியர்

புராணவித்தகர் வினாசித்தம்பியின் உள்ளத்திலிருந்து...

# சக்கரத்தின் மகிமை



"சலந்தரன் தன் உடல் கிழித்த நல்லாழி" மணிவாசகர்.

தாம் பெறுவதற்கு ஆயிரம் செந்தாமரை மலர்களால் விஷ்ணு மூர்த்தி பூசித்துவரும் நாளில் ஒரு பூ குறைய திருவிழியின் மழலையால் (கண்மணி) அர்ச்சித்து திருவிழி மழலை எனும் திருநாமம் பெற்றிற்று. நல்லாழி என்பது சிவனின் வலது திருவடியால் வட்டம் ஆகிய காரணமுமேயாம்.

இதனால் கச்சியப்பச் சிவாச்சாரியாரும் "பதுமநேர் கண்ணன்" என விஷேடித்தமை குறிப்பிடற்பாலது. பதுமத்திற்கு நேர்ந்த கண்ணும் கண்ணுக்கு நேர்ந்த பதுமமும் என இரட்டுற அமைந்த ஒரு மொழி ஆயிற்று.

சக்கரம் எனும் இந்நூலை வெளியிடும் பெரியாழ்வார் ஆச்சிரம திரு ஆனந்தன் ஆல்+நந்து+அம் = ஆலிலையில் சயனிக்கும் நந்து (சங்கு) எனும் பாஞ்ச சன்யத்தை தாங்கும் கடல் வண்ணனின் நாமங்கொண்ட பெருமை அளப்பரியது. இவை தவிர இந் நாமத்திற்கு பொருள்கள் பல உள. இவ்விடம் இது ஏற்புடைத்து. இவரின் பணிகள் வற்றாக்கிணறு போல மிளிர வல்லிபுர ஆழ்வார் சுவாமி அருள் நிறையும்.

ஆனந்தம் பணி வளர வேண்டும்
வே.வினாசித்தம்பி
மிருசுவில் வடக்கு, மிருசுவில்.

# கீதை காட்டிய பாதை

உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான ஸ்ரீ மகாவிஸ்ணு மூர்த்தியானவர் பூமாதேவியின் வேண்டுதலுக்கிணங்கி பூமிப்பாரந் தீர்ப்பதற்காகவே கண்ணனாக திருவவதாரம் செய்து மகாபாரதத்தைத் தோற்றுவித்தார். காத்தற் கடவுளாகிய பரந்தாமன் மகாபாரதத்திலே சகோதரர்களுக்கு இடையே பகைமையை வளர்த்துப் பஞ்சபாண்டவர்கள் மூலமாகத் தமது காரியத்தைச் சுலபமாக நிறைவேற்றும் பாங்கு போற்றுதற்குரியது.

இந்த உலகம் மாயை. இம் மாயையை வெற்றிகொள்வதாயின் மன வைராக்கியம் வேண்டும். மகாபாரதப் போர் ஆரம்பமாகிய முதல் நாளிலே பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தம் சேனைகளை அணிவகுத்து நின்றனர். அப்போது அருச்சுனனுடைய தேர் அழகாக முன்னே வந்து நின்றது.

இந்தப் பார்த்தனுக்குத் தேரோட்டும் சாரதியாக ஸ்ரீ கண்ண பரமாத்மா தேர்த்தட்டிலே உட்கார்ந்திருந்தார். அருச்சுனனோ போர்க் கோலம்பூண்டு யுத்தத்திற்கு ஆயத்தமாக அந்த அழகான தேரிலே நேரிலே வந்திருந்தான்.

சுற்று முற்றும் பார்த்த அருச்சுனனுக்கு ஓர் எண்ணம் உதயமாகிற்று. முன்னே நிற்பவர்கள் துரோணர், பீஷ்மர், விதுரர், என்று எல்லோருமே வணக்கத்துக்குரிய உறவினர்கள். அனைவரையும் கண்டதும் அவனுடைய மனம் அலை பாய்ந்தது. இத்தனை உறவினர்களையும் கொன்று வென்று இந்த இராச்சியத்தை ஆளவேண்டுமா?

இப்படி ஒரு வாழ்க்கை தேவைதானா? சொந்தச் சகோதரர்களையெல்லாம் கொன்று குவித்து விட்டு அரசாட்சியைக் கைப்பற்றி என்ன பிரயோசனம்? அவர்களெல்லாம் இல்லையென்ற ஆனதன் பிற்பாடு யாரை யார் ஆளுவது? சீ...! வெட்கம்!!.... உடனே அருச்சுனன் தேர்த் தட்டினின்றும் குதித்து ஓடத் தொடங்கினான்.

இதைக் கண்ணுற்ற கண்ணபரமாத்மா நடந்ததைத் தன் ஞான திருஷ்டியினால் அறிந்து கொண்டார். தேரினின்றும் கீழே குதித்து ஓடிய அருச்சுனனைப் பிடித்து இழுத்துவந்து "அர்ச்சுனா என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? ஒரு நல்ல வீரனுக்கு இது அழகாகுமா? ஏன் இப்படிச் செய்தாய்? என்று கூறி மீண்டும் தேரிலே ஏறச்செய்து அவனது உள்ளக்கிடக்கையை அறிந்து கொண்டு அருச்சுனனுடைய தடுமாற்றத்தை மாற்றும் நோக்குடன் தத்துவம் பேசத் தொடங்கினான்.

"அருச்சுனா! நீ ஒரு வீரன்

என்று நினைத்திருந்தேன். ஆனால் இப்போதுதான் தெரிகிறது சுத்தக் கோழை என்று! சீ சீ உனக்கு வெட்கமில்லை. யுத்தம் என்று வந்தபிறகு யாராவது திரும்பி ஓடுவானா?" என்று தேனொழுகப் பேசி அருச்சுனனுக்கு ஞான உபதேசம் செய்தான் கண்ணன்.

"ஏ அருச்சுனா! நான் சொல்வதை மிகவும் அவதான மாகக் கேட்பாயாக. இப்பரந்த நிலவுலகின் கண்ணே எப்போது தர்மங்குன்றி மேலோங்குகின்றதோ அந்தக் காலத்தில் நான் திருவவதாரம் செய்து அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலை நாட்டுவேன். அதாவது துஸ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனஞ் செய்வேன்" என்று மெதுவாக சொல்லத்துவங்கினான்.

கண்ணன் சொல்லச் சொல்ல அருச்சுனனுடைய உள்ளத்திலே ஒரு வெளிச்சம் உண்டாகியது. ஆனாலும் அவனுடைய அடி மனதிலே ஒரு குற்ற உணர்வு இருந்துகொண்டு உறுத்திக்கொண்டேயிருந்தது. உடனே கிருஷ்ண பரமாத்மாவைப் பார்த்து, "கண்ணா என்னுடைய உறவுகளையெல்லாம் சாகடித்து விட்டு இப்பூலோக சாம்ராஜ்யத்தை ஆளவேண்டுமா?" இதுதான் இப்போதுள்ள பிரச்சினை என்றான்.

கண்ணன் சிரித்துக் கொண்டே பதில் கூறினான். "அட அர்ச்சுனா! நீ பிறக்கும் போது ஏதாவது கொண்டுவந்தாயா? இப்போது அதை இழந்துவிட்டாயா? நன்றாகச் சிந்தித்துப் பார்! உனக்கே சரியான பதில் கிடைக்கும்"

"கண்ணா! நான் பிறக்கும் போது ஒன்றுமே கொண்டு வரவில்லை. ஆனால் இந்தப் பேய் மனம் கேட்குதில்லையே! என்னுடைய உறவு, என்னுடைய காணி, என்னுடைய வீடு என்று ஆசையை வளர்த்துக் கொண் டோமே! அதற்கு நீங்கள் என்ன விடை சொல்லப் போகின்றீர்கள்?" என்றான் அருச்சுனன்.

மீண்டும் சிரித்தான் கண்ணன். "உங்களுக்குச் சிரிப் பாய் வருகிறது. எனக்கு வேதனை யாய் இருக்கிறது" என்று அருச்சுனன் கண்கலங்கிய படியே கேட்டான்.

அதற்கும் சிரித்த கண்ணன் அருச்சுனனைப் பார்த்து, "அருச்சுனா! எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது, இப்பொழுது எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது. எது இனி நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும். இவ்வாறு மனதிலே நீ எண்ணிக்கொண்டால் கவலைப்படத் தேவையில்லை. உன்னுடையது என்று நீ எதைக்கொண்டுவந்தாய்? இப்போது அதை இழந்ததுபோல் துடிக்கிறாய்! எதற்காக நீ இப்போது அழுது கண்ணீர் வடிக்கின்றாய்! உன்னால் சிந்திக் வேண்டிய விடயம் நிறைய இருக்கிறது.

இந்த உடம்பு நிலை யில்லாதது. நீர்க்குமிழிக்கு நிகரானது இந்த யாக்கை. அழிகின்ற தேகத்தை வைத்துக்

கொண்டு தேசத்தில் வாழத் துடிக்கின்றாயே! இவ்வுலகத்தில் மனிதப்பிறவி ஒரு புனிதப்பிறவி. இந்த உடம்பில் உயிர் இருக்கும் மட்டும்தான் எல்லா ஆட்டமும். உயிர் பிரிந்துவிட்டால் பணம் பணம் என்று ஆலாய்ப் பறந்த மனிதன் இன்று பிணம் பிணம் என்று அழைக்கப்படுகின்றான். ஆதலால் இந்த நிலையில்லாத உடம்பில் உயிர் இருக்கும் போதே நீ புண்ணியத்தைத் தேடிக்கொள்ள வேண்டும். பாவத்தை விலக்கிக் கொள்ள வேண்டும்.

"அருச்சுனா! நன்றாகச் சிந்தித்துப் பார்.! நீ இந்தப் பூமியில் எதை எடுத்துக்கொண்டாயோ அது இன்று உன்னுடையதாகவே இருக்கின்றது. என்று வைத்துக் கொள்வோம். அதே நாளைக்கு இன்னொருவருக்குச் சொந்த மாகிவிடக்கூடும். இதை நீ மறுக்கமுடியுமா? நான் நான் என்ற ஆணவத்தை அடக்கிவிட வேண்டும். அகங்காரம் இருக்கும் மட்டும் உனக்கு உய்வே கிடையாது.

இந்த யுத்தத்திலே நீ கொல்லப்போவது உடலைத்தான். உயிரையல்ல. அது உடம்பை விட்டுப் பிரிந்து வேறொரு பிறவியெடுக்கப் போய்விடும். இது உலக நியதி. கடமையைச் செய்.!

"அருச்சுனா! நீ செய்கின்ற இந்தப் பாரதப் போரிலே நடப்பது அனைத்துக்கும் நான் பொறுப்பு. நீ உடம்பைக் கொல். அது பாவமாக இருக்கிறதே என நீ நினைத்தால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீ ஒன்றுக்கும் பயப்படாமல் யுத்தத்தைச் செய். உனக்கு தேர்ச் சாரதியாக நான் இருக்கிறேன். யுகந்தோறும் என்னுடைய அவதாரம் சிஷ்டர்களைக் காப்பதும் துஷ்டர்களை அழிப்பதுமேயாகும். பூமிபாரம் தீர்க்கவே இந்த யுத்தம். உனக்கு எந்தப் பாவமும் வந்து சேராமல் நான் பார்த்துக் கொள்கின்றேன். உற்றார் உறவினர்கள் என்பதை மறந்துவிடு. துணிந்து உன் வீரத்தைக் காட்டு. ஈற்றில் வெற்றி உனக்குத்தான். துரியோதனனாதியோர் கெட்ட வர்கள். அவர்களுக்கு அழிவு நிச்சயம். சீரிய நேரிய பாதையில் நடக்கும் பாண்டவர்களுக்கே வெற்றி கிடைக்கும். இது உறுதி!"

இவ்வாறு யுத்தகளத்திலே வைத்து அருச்சுனனுக்கு கண்ணன் கீதையை உபதேசித்தான். கண்ணன் கூறியவை அனைத்துமே கீதாபதேசமாகும். இந்த உண்மையை நாங்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கடவுள் இந்த உடம்பைத் தந்தது நல்லன செய்வதற்குத்தான். தீயவை செய்வதற்கல்ல. எவ்வளவுதான் துன்ப துயரங்கள் வந்தாலும் உண்மையே பேசவேண்டும். மறந்தும் பொய்பேசக் கூடாது. மற்றவர் மனம் புண்படும்படியாகப் பேசக்கூடாது. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியமும் நன்மையை அடிப்படை யாகக் கொண்டிருக்க வேண்டும். எள்ளளவும் தீமை பயக்க இடமளிக்கக்கூடாது.

பொருள் சேர்க்கும் போதும்

பணம் உழைக்கும் போதும் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். தீய வழியில் மற்றவர்களை ஏமாற்றிப் பணம் சேகரிக்கக் கூடாது. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும். நாம் நல்ல வழியில் பாடுபட்டு உழைத்தால்தான் அந்தப் பணம் நின்று நிலைக்கும். கெட்ட வழியில் சேர்த்த பணமானது எப்படி வந்ததோ அப்படியே போய்விடும்.

கடவுள் ஒருவர் இருக்கிறார். நாம் செய்வதையெல்லாம் பார்த்துக்கொண்டேயிருப்பார். இருட்டுக்கும் பார்க்கின்ற விழி இருக்கும். சுவருக்கும் கேட்கின்ற காது இருக்கும். ஒருவரும் பார்க்கவில்லைத்தானே என்பது மடைத்தனம். நாம் யாரையும் ஏமாற்றலாம். கடவுளை ஏமாற்ற முடியாது.

"புண்ணியமாம் பாவம் போம்." இது மண்ணில் பிறந்தார்க்குரிய நியதி. நாம் நாம் செய்வது நமக்குத்தான். ஆகவே நாங்கள் என்றுமே எப்பொழுதுமே நல்லதையே செய்யவேண்டும். தீயவற்றை விலக்கிவிட வேண்டும். வினை விதைத்தவன் வினை யறுப்பான். தினை விதைத்தவன் தினையறுப்பான். பாகற்கொட்டையை நட்டால் பூசணிக்காய் கிடைக்காது. பாகற்காய்தான் கிடைக்கும்.

நாம் நல்லதைச் செய்தால் நன்மைகள் உண்டாகும். தீயவற்றைச் செய்தால் தீமையே கிட்டும். இதை மனதில் வைத்துக்கொண்டு கீதை காட்டிய பாதையில் வாழ்க்கை வண்டியை ஓடவிடவேண்டும். எல்லாம்வல்ல ஸ்ரீதேவி பூமிதேவி சமேத ஸ்ரீமந்நாராயணனைத் தினமும் சிந்தித்து வந்தித்துச் சேவிக்க வேண்டும். இதுநாள்வரை போனது போகட்டும். இனிமேலாவது நன்மையைச் செய்து இம்மைக்கும் மறுமைக்கும் அம்மைக்கும் நன்மை பயக்க வாழ்வதற்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

"கலாபூஷணம்"
தெய்வத்தமிழ்ச்சுடர்
இராசையா ஸ்ரீதரன்.



# துளசிச்செடியும் விஞ்ஞானமும்


"ஒருவன் தன்னுடைய வீட்டில் துளசிச் செடியை எத்தனை நாட்கள் வைத்துப் பராமரிக் கிறானோ அத்தனை ஆயிரம் ஆண்டுகள் அவன் மறுமையில் வைகுந்தம் சென்று பெருமை யடைகிறான்.

**விருட்ஷாயுர்வேதம்.**

மனிதன் தோன்ற முன்னரே உலகில் தோன்றியவை மரம், செடி, கொடிகளாகும். இவற்றின் சக்திகளையும் மற்றும் அவற்றின் தன்மைகளையும் நம் முன்னோர் நன்கு தெரிந்து வைத்திருந்தனர். இதனாலேயே பிற மதத்தவர் கண்களிற்கு வெறும் தாவரங்க ளாகத் தெரிந்தவை எமது மூதாதையர் கண்ணுக்கு தெய்வங்களாகவும், தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகவும் தோன்றின.இதனாலேயே வரலாற் றின் ஆரம்பகாலம் முதல் மரங்களை தெய்வங்களாகவும், தெய்வம் உறையுமிடங்களாகவும் வணங்கி வருகின்றோம். இந்த வகையில் துளசிச் செடியும் எமது பண்பாட்டில் வணக்கத்திற்குரிய மிக முக்கிய தாவரமாகத் திகழ்ந்து வருகிறது.

**துளசியைக் காப்போம்.**

துளசிச் செடியை வீடுகளில் அழகிய மாடம் அமைத்து சிரத்தையுடன் வளர்த்துப் பூஜிக்கும் மரபு பண்டைக்காலம் தொட்டு இந்துக்களால் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. அது மட்டுமன்றி துளசியை வணங்கு வதற்கென்று தனியான வழிபாட்டு முறையைக் கூட இந்துக்கள் பின்பற்றி வந்துள்ளனர். ஏகாதசி விரதம் அனுஷ்டிப்பவர்கள் கூட மறுநாள் துவாதசியன்று துளசித்



தீர்த்தம் அருந்தி உபவாசத்தை முடிக்கும் மரபும் எம்மத்தியில் இருந்துவருகிறது. இவ்வாறாக துளசியைப் போற்றிப் பேணி வணங்கும் பண்பாடு எம் மத்தியிலிருந்து சிறுகச் சிறுக வழக்கொளிந்து வருகிறது. எமது சமயம் மட்டுமன்றி விஞ்ஞானங்கூட வீடு தோறும் துளசிச் செடி வளர்த்தல் வேண்டுமென எடுத்துக் கூறுகின்றது.

**விஞ்ஞானம் போற்றும் துளசி**

துளசி எல்லா இடங்களிலும், பலதரப்பட்ட காலநிலையிலும்

வளரக்கூடிய தாவரமாகும். துளசிச் செடியானது அதிகளவு கரியமில வாயுவை (காபனீர் ஒட்சைட்டை) உள்ளெடுத்து அதிகளவு பிராண வாயுவை (ஒட்சிசனை) வெளி விடுவதாக விஞ்ஞானிகள் ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். எனவே துளசிச் செடி வளர்க்கப்படும் சூழல் மனித வாழ்விற்கு மிகவும் உகப்பான சூழலாக உருவாக்கம் பெறுமல்லவா. பிராண வாயு நிறைந்த சூழலில் வாழும் மனிதன் சிறந்த புத்துணர்ச்சி பெறுவதுடன் தன் செயற்பாடுகளில் உத்வேகத்துடன் ஈடுபடுவதற்கும் இது வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும். எனவே துளசிச் செடி வளர்க்கும் வீட்டில் வாழ்பவர்கள் பல்வேறு சுகங்களையும், சந்தோசத்தையும் அனுபவிக்கக்கூடியவர்களாக இருப்பர்.

இது மட்டுமன்றி துளசிச் செடி தான் வாழும் சூழலிலுள்ள மாசுபட்ட வாயுக்களைக்கூட தன்வயமாக்கி சூழலைக் காப்பதில் முன்னிலை வகிக்கும் தாவரமென்பதும் விஞ்ஞானிகளின் எடுத்துக்காட்டாகும்.

துளசிச் செடி வளர்க்கப்பட்ட வீட்டிற்கு நுளம்பு, கொசு போன்ற தீமை செய்யும் உயிரினங்கள் வருவதில்லை. எனவே இவற்றால் பரவும் நோய்களும் துளசிச் செடி வளர்ந்துள்ள வீட்டை அண்டுவதில்லை. இதே போல விஷமுள்ள ஜந்துக்கள் கூட துளசிச் செடிகள் நிறைந்த சூழலை அணுகுவதற்கு அஞ்சுவதாகவும் கூறப்படுகின்றது. எனவே இதன் மூலம் பல்வேறு தீய அங்கிகளால் ஏற்படும் ஆபத்து மற்றும் ஐயப்பாடுகளைப் போக்கிக் கொள்ளவும் முடியும்.

தாவரங்களுக்கெல்லாம் உயிர்மட்டுமல்ல உணர்வுமுண்டு. இவற்றோடு நாம் நமது உணர்வுகளைப் பரிமாறிக் கொள்ளவும் முடியும். அதாவது அன்பு கூடக் காட்டலாமென்பதும் விஞ்ஞானிகளால் ஆய்வு மூலம் எடுத்துக்காட்டப்பட்ட உண்மையுமாகும்.

இந்த வகையில் தாவரங்கள் எல்லாவற்றுள்ளும் உணர்ச்சிகளால் பாதிப்படையக் கூடியதும், அன்பைப் பரிமாறிக் கொள்வதில் துலங்கல் பேறைக் காட்டக்கூடியதுமாக துளசிச் செடியுள்ளமையும் ஆய்வுகள் மூலம் நிரூபனமான உண்மையுமாகும்.

Ocimum Sanctum எனும் தாவரவியற் பெயர் கொண்டதும் Labiatae என்ற தாவரக் குடும்பத்தைச் சேர்ந்ததுமான துளசி சித்த மருத்துவம், ஆயுர்வேத மருத்துவம் போன்றவற்றில் மட்டுமன்றி ஆங்கில மருத்துவத்திலும் பயன்படும் பொருளாகவும்

மாறியுள்ளது. சுவாசத்தொகுதி சம்பந்தமான நோய்கள், செரிமானத் தொகுதி மற்றும் நரம்புத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, கழிவகற்றும் தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி தொடர்பான நோய்களிற்கும் அருமருந்தாகவும் உள்ளது.

துளசி இலை ஊறவிட்ட தூய நீரை உட்கொண்டுவந்தால் இருதய நோய்கள் குணமாவதுடன் இருதயமும் வலிமை பெறுகிறது. இதனாலேயே துளசி கலந்த புனித நீரைத் தீர்த்தமாக வாங்கிப் பருகும் பலரையும் இதய நோய்கள் அணுகுவதில்லை.

**பிரபலமடைந்துவரும் துளசித் தேநீர்**

தற்போது துளசிச் செடியைக் கொண்டு தேநீர் தயாரித்துப் பருகும் பழக்கம் பல்வேறு நாடுகளிலும் பரவி வருகிறது. இத் தேநீர் வெறும் உற்சாகத்தையும், நல்ல வாசனையையும் மட்டும் அளிக்கவில்லை. உடலுக்கு ஆரோக்கியத்தையும், நோயிலிருந்து உடலைக் காக்கும் சக்தியையும் அளிக்கிறது. நாம்கூட துளசிச் செடியின் இலைகளை நிழலில் உலர்த்தி எடுத்து அவற்றை நாம் தயாரிக்கும் தேநீருடன் கூட கலந்து பருகிக்கொள்ளலாம்.

**துளசிச் செடியை வணங்குவோம்.**

ஹரி பக்தி சுதோயம் எனும் நூலில் துளசிச் செடியின் மகிமை பற்றி விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது. துளசி நுனியில் நான்முகனும், மத்தியில் திருமாலும், அடியில் சிவனும், மற்றைய பகுதிகளில் பன்னிரண்டு ஆதித்தியர்களும், பதினொரு ருத்திரர்களும், எட்டு வசுக்களும், இரு அசுவினி தேவர்களும் எழுந்தருளியிருப்பதாகவும் குறிப் பிடப்பட்டுள்ளது. எனவே இத் துளசிச் செடியை வணங்குவதனால் இவர்கள் அனைவரையும் வணங்கிய நற்பேறு பெற முடியுமல்லவா.

கார்த்திகை மாதத்துப் பௌர்ணமியிலே அவதரித்த இலக்குமி தேவியின் அம்சமான துளசிச் செடியை வருடா வருடம் இந் நாளில் விசேடமாகப் பூஜிப்பவர்களுக்கு இலக்ஷ்மி தேவியின் அருட்கடாச்சம் கிடைக்குமென்பதும் எம் மத்தியில் நிலவிவரும் ஓர் உண்மையுமாகும். இதே போல் கார்த்திகை மாதத்தில் துளசித் தளத்தைத் தானம் செய்தால் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்த புண்ணியம் கைவரப் பெறும் எனும் நம்பிக்கையும் பன்னெடுங்காலமாக இந்துக்கள் மத்தியில் உண்டு.

**துளசி இலை பறிக்கும் முறை.**

"பத்ரம், பலம், புஷ்பம், தேயம்" என கிருஷ்ணபரமாத்மா பகவத் கீதையில் தன்னை பூஜிக்கத் தேவையான நான்கு

பொருட்கள் எனக் குறிப்பிடுகிறார். இங்கு பத்ரம் என்பது துளசிச் செடியின் இலையையே குறிக்கும் என பலரும் கூறுகின்றனர். துளசிப் பத்திரமானது மகாவிஷ்ணுவினதும், அம்பிகையினதும் பாதங்களில் சமர்ப்பிக்க மிகவும் உகந்ததாகும்.

பூஜைக்காக துளசி இலைகளைப் பறிக்கும் போது முதலில் செடியை மலர்களால் அர்ச்சித்து, நமஸ்கரித்து, தீர்த்தம் வார்த்த பின்னரே துளசித் தளங்களைப் பறித்தல் வேண்டும். குளித்து தூய உடலுடனேயே துளசிச் செடியைத் தொடவும் வேண்டும். இதுமட்டுமன்றி மாதப்பிறப்பு, சதுர்த்தி, துவாதசி, சந்தியாவேளை, செவ்வாய், வெள்ளிக் கிழமைகளின் பிற்பகல் வேளை, சூரியன் அஸ்தமனமான பின்னர், சந்திர கிரகணத்தின் போது, ஜனனம் - மரணம் போன்ற சம்பவங்கள் நிகழ்ந்த போது துளசிச் செடியைப் பறித்தல் கூடாது. இவ்வாறான காலங்களில் துளசியைக் கிள்ளுபவர்கள் பிரம்மஹத்தி தோசத்திற்குட்படுவர் என்று கூறப்படுகிறது.

மகாவிஷ்ணுவிற்குப் பிரியமானதும், விஞ்ஞானிகளால் வியந்து போற்றப்படுவதுமான துளசிச் செடியை வீடுதோறும் நாட்டிப் பராமரிப்பதன் மூலம் நன்மைகள் பல நாம் பெறுவோம். இதுமட்டுமன்றி பிறரிற்கும் துளசிச் செடியை நாட்டிப் பராமரித்தலின் தேவையையும், தாற்பரியத்தையும் உணர்த்தி எமது பிரதேசத்தில் துளசிச் செடிகள் வீடுதோறும் நடுவதற்கு எம்மாலியன்ற உதவிகளைச் செய்வோம்.

திருமதி அ.நிருபா
(விஞ்ஞான ஆசிரியர்)
உரும்பிராய்.



# ஏன் அழுதான்
# இராமாயணத்தில் ஒரு சம்பவம்

**காட்சி 1**

ஒரு குடிசை. அதனுள்ளே நடக்கும் உரையாடலை மாறுவேடத்தில் நகர்வலம் வந்த இராமன் வெளியே நின்று கேட்கின்றான். நிகழ்ச்சி திரை உள்ளே உரையாடல்களை வெளி அரங்கில் நிற்கும் இராமன் கேட்கின்றான். (தெருவாசலில்)

**அவன்:–** பார்வதி... பார்வதி... என்ன ஒரு சத்தமும் வரவில்லை. எடியே பார்வதி....

**அவள்:–** என்ன வந்ததும் வராததுமாக பெரிய ஆரவாரம். ஆட்டமும் பலமாய் இருக்கு... என்ன?

**அவன்:–** ஓமடி ஓம்... எத்தனை நாளடி நான் வீட்டைவிட்டுப்போய். உன்னைப் பிரிந்து உழைக்கப்போனனான். இத்தனை நாளுக்குப் பிறகு வந்திருக்கிறான் கண்ணாளன். வீட்ட வந்துட்டான் என்றால் எவ்வளவு சந்தோஷப்படவேணடிய நீ... சீ... போடி. இவ்வளவு நேரமும் கூப்பிடிக் கூப்பிட எங்கையடி போனனீ..?

**அவள்:–** நீ போட்டுட்டு வந்ததால நான் போயிட்டு வந்தமாதிரி தெரியுது. உள்ளே இருந்துதானே வந்தனான்.

**அவன்:–** எடியேய் எத்தனை சத்தம் போட்டடி கூப்பிட்டனான். பரமசிவன் பெண்சாதி பார்வதிக்கே அந்தச் சத்தம் கேட்டிருக்கும்.

**அவள்:–** யோவ்... நான் ஓம் ஓம் என்றது உன் மப்புக் காதிலை ஏறவில்லைப் போல...

**அவன்:–** என்ன... மப்புக் காதோ... மந்தக்காதோ... இவ்வளவு நேரமும் என்னடி செய்தநீ.

**அவள்:–** நீ வரப்பொறாய் என்று உந்த ஊத்த வாய்க்கு உருசியாய் கருவாடு பொரிக்கக் கழுவினனான்.

**அவன்:–** நீ கருவாடு கழிவினனியோ அல்லது கதிரேசனோட தழுவினனியோ எல்லாம் எனக்குத் தெரியுமடி...

**அவள்:–** விடிஞ்சாப் போச்சு குடிகாரன் பேச்சு. இப்ப வாயில வாறதெல்லாம் வம்பாய் இருக்கு.

**அவன்:–** எடி... எடி... உன்ர கள்ள நடிப்பு எல்லாம் தெரியுமடி...

**அவள்:–** உனக்கு உண்மை, நேர்மை இவைகளைத் தவிர பொய், புரட்டு, சூது, வாது எல்லாம் தெரியும் என்பது எனக்குத் தெரியும்.

**அவன்:–** பொத்தடி வாய்...

**அவள்:-** கொத்தடிமைகளாய் பெண்களை மதிக்கும் மதுமயக்கத்தில் மதியிழக்கும் மமதைகொண்ட ஆடவர் உலகில் நீ ஒரு அங்கம்தானே...

**அவன்:-** எடியேய் உதுகளெல்லாம் உழுத்துப்போன பழங்கதை. நீ இப்ப எங்க போட்டுவாறாய்..?

**அவள்:-** உனக்கு உண்ணானை விசர்.

**அவன்:-** ஓமடி ஓம். எனக்கு விசர்தான்டி. இராவணன் தூக்கிக்கொண்டுபோன சீதையை கொண்டுவந்து சிம்மாசனத்திலே இருத்தி, முடிசூடி கொண்டாட்டம் நடத்திய இராமனில்லையடி நான். மாற்றான் எச்சில்ப் படுத்தினால் என்ன படுத்தாவிட்டால் என்ன? தூக்கிக்கொண்டு போனவள் போனவள்தான். மாற்றான் மனதை மயங்க வைத்தது பாவம்தானே பரதேசி...

**அவள்:-** பயித்தியக்காரா உன் குடிவெறியால் சும்மா அலம்பாதே. நாடு பெற்ற நற்பயனால் நாடாள்கின்ற தசரதராமனையும் சீதாபிராட்டியையும் அவமானமாகப் பேசாதே... வீண் அழிவைச் சந்திக்காதே.

**அவன்:-** எடியேய்... உனக்கு ஒன்று சொல்கிறேன் கேள். நான் இங்கு வரும்போது நீ யாருடனோ கதைத்த சத்தம் கேட்டது. அது ஆரடி... உன்னை அணைக்க நான் இராமன் அல்லடி. நான் ரோஷக்காரன்... உன்னை என்ன செய்கிறேன் பார்... (கையை ஓங்குதல்)

**அவள்:-** கையையா ஓங்குகிறாய்..?

**அவன்:-** எட கையை ஓங்கினால் என்னடி செய்வாய்..?

**அவள்:-** உனக்கு மட்டும்தான் கையை ஓங்க முடியும் என்று எண்ணாதே... எங்கட கைகளும்... ஓங்க நேரமாகாது...

**அவன்:-** என்னடி சொன்னாய்...

**அவள்:-** யோவ்... சும்மா அலம்பாத... கல் என்றாலும் கணவன். புல் என்றாலும் புருஷன்' என்று மதித்து வாழ்ந்த என்னை - நீ மிதித்து வாழ நினைக்கிறாய்.... உன்னோடு வதைபட்டு வாழ்வதைவிட புனித மண்ணான இந்த அயோத்திய மண்ணிலே தசரத இராமனாக, சீதா ராமனாக, ராஜ ராஜனாக அரசாளும் எங்கள் அநாத இரட்சகன் சிறீராமபிரான் அரசாட்சியில் நான் தனியொருவளாக வாழமுடியும். வாழுவேன். அயோத்தி மன்னரான எங்கள் சிறீரகுராமனை இகழ்ந்து பேசிய உனக்கு இந்த வீட்டில் இடமில்லைப் போ... போ வெளியே...

**அவன்:–** என்ன சொன்னாய்... (அடிக்கக் கை ஓங்க அதைப் பிடித்தவள்)

**அவள்:–** ஏய் இன்று முதல் நீ எனக்கு கணவனுமல்ல, நான் உனக்கு மனைவியுமல்ல. என்னைத் தீண்ட உனக்கு உரிமையும் இல்லை. ஒரு ஏகபத்தினி விரதனான சீதா இராமனை சீரளித்துப் பேசிய நீ போகலாம் போ....

**அவன்:–** திமிர் பிடித்தவளே... இப்பவும் சொல்கிறேன் இராமனைப்போல ரோஷம் கெட்டவனல்ல நான்... உனக்குப் பாடம் படிப்பிக்கிறேன் பார்... இரு வாறன்... (போகிறான்.)

**அவள்:–** அறிவு கெட்ட மனிதன். குடிச்சா... என்ன பேசுறது எதைப் பேசுவது ஒன்றும் தெரியாது.... வெறி முறிய எல்லாயம் சரியாய் வரும்.... ராமா... ராமா....


(உள்ளேபோக்... )

(வெளியே இராமன்)

**இராமன்:–** என்ன கொடுமை இது... நான் செய்தது தவறா? சீதையைச் சிறை மீட்டது தவறா. அவளைச் தீயிலே குளிக்கச் செய்தது பிழையா?... இவ்வளவுக்குப் பின்னரும் அவள் மடாசுபட்டவளா..? இப்படி... அப்படி.... சொல்லிவிட்டானே ஒரு பாமரன். எனது இராச்சியத்தில் இப்படி ஒரு அவப்பெயரோடு நான் சிம்மாசனத்தில் இருந்து அரசாள வேண்டுமா..? முடிவு... மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்வு... அதற்கான முடிவை நான்தான் எடுக்கவேண்டும்.... முடிவை நான்தான் எடுக்கவேண்டும்.... அதுவும் இப்பொழுதே... இந்த விநாடியே...

சுழலும்.................

**கலாபூஷணம் இ.கிருஷ்ணதுரை**
**பண்ணாகம்**



# பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டார் இலக்கியப் பதிப்புகள்

தொடர்ச்சி....

கல்வித் தேவைகளுக்காகப் பதிப்பிக்கப்படுதல்

தமிழ்நாட்டில் பிரித்தானிய நிர்வாக சேவை ஆரம்பிக்கப்பட்ட போது மெட்ராஸ் பிரெசிடென்சியில் வேலைபார்த்த பிரித்தானிய சிவில் உத்தியோகத்தர் உள்ளூர் மொழியைக் கற்குமாறு வேண்டப் பட்டனர். சென் ஜோர்ஜ் கோட்டைக் கல்லூரியின் சட்டத்தில் (1813 ஜனவரியில் வெளியிடப்பட்டது. ) கனிஷ்ட சிவில் சேவையாளர்கள் தென்னிந்திய மொழிகளில் .(தமிழ் தெலுங்கு கன்னடம் மலையாளம்) ஆகிய ஒன்றைக் கற்றிருக்க வேண்டும் எனக் கூறப்பட்டது அதன் பின்னரே இரண்டாவது மொழியாக மராத்தி இந்துஸ்தானி பாரசிகம் அரபி அல்லது சமஸ் கிருதம் ஆகியவற்றுளொன்றைப் பயில வேண்டும். அக்காலத்தில் சென் ஜோர்ஜ் கோட்டைக் கல்லூரியில் மிகக் குறைவான மாணவர்களே அங்கு கல்வி கற்றனர் எனப்படுகிறது. 1820 இல் இரண்டு டசின்களுக்கும் குறைவான மாணவர்களே பயின்றனர் என்றும் 1830-1840 களில் இன்னும் சற்று அதிகமனோரே கற்றனர் என்றும் கூறப்படுகிறது. (ஸ்ருவர்ட் பிளக்பேண் 2004)

இந்தக் கல்லூரி 1812 இல் ஆரம்பிக்கப்பட்டபோது தமிழ் போன்ற மொழிகளைக்கற்க விரும்பிய ஆங்கில (வெளிநாட்டு) மாணவர்களுக்கு அச்சடித்த புத்த கங்களை உடனடியாக பதிப்பித்து வழங்க வேண்டியிருந்தது. தமிழைப் பொறுத்தவரை அன்றைய நிலையில் செய்யுளிலக்கியங்களே முதன்மை பெற்றனவாக இருந்தன. ஆரம்பநிலையில் அம்மாண வர்களுக்கு செய்யுளிலுள்ள விடயங்களை விளக்குவது கடினம் என்ற நிலையில் செய்யுளிலிருந்த இலக்கியங்கள் உரைநடைக்கு மாறவேண்டியேற்பட்டது. அதனால் ,அகராதிகள் உரைநடையிலிருந்த வாய்மொழிக்கதைகள் போன்றன அவசியம் தேவைப்பட்டன. அவ்வாறாகத் தொகுக்கப்பட்ட முதலாவது கதைத்தொகுதி சென் ஜோர்ஜ் கோட்டைக் கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியராகவிருந்த பண்டிதர்

தாண்டவராய முதலியாரால் 1820 இல் தொகுக்கப்பட்ட கதாமஞ்சரி ஆகும். இத்தொகுதி யாரைநோக்கி வெளியிடப்பட்டது என்பது அதன் முன்னுரையில் கூறப்படுகிறது. திரு. ரிச்சாட் கிளார்க் சென்னைக் கல்லூரியின் தலைவராக இருந்தபோது தமிழைக்கற்க விரும்பும் தொடக்க மாணவருக்கு சில கதைகளைப் பதிப்பிக்கும் படி கேட்டுக்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் அக்கதைகளைத் தொகுத்ததாக தாண்டவராய முதலியார் கூறியுள்ளார்.

இக் கதாமஞ்சரியில் 82 கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. மூன்றாவது புத்தகம் கதாசிந்தாமணி 1833 இல் வெளிவந்தது. ஆரம்பத்தில் அச்சிடப்பட்ட தமிழ்நூல்கள் நீண்ட முன்னுரைகளைக் கொண்டுள்ளன. நூலொன்றை அச்சிட முயலும் ஒருவர் அப்பதிப்பின் நம்பகத் தன்மைபற்றி அறிய அதிகம் முயற்சிக்க வேண்டியிருந்தது . 1835 இற்குப் பின்னர் பாடசாலைக் கலைத்திட்டத்தின் ஒருபகுதியாக அமைந்த கதைப் பதிப்புகளில் எழுத்தாளரின் பெயர்,பதிப்பகத்தின் பெயர் பதிப்பிப்பவரின் பெயர்கள் போன்றன கட்டாயம் கொடுக்கப்பட வேண்டியிருந்ததுடன் அத்துடன் ஆசிரியரின் தகைமை புத்தகத்தை அச்சிட அனுமதியளித்தவர் பற்றிய விபரம் போன்றவை 19ஆம் நூற்றாண்டில் வெளியிடப்பெற்ற புத்தகங்களின் முக்கிய அம்சமாகும்.

கதாமஞ்சரியை உதாரணமாகக் கொண்டால் ஆசிரியர்பெயர் தாண்டவராய முதலியார் என்பது பெரிய எழுத்துகளில் பிரசுரிக்கப் பட்டுள்ளதுடன் அவரது தகைமை களுக்கு அதிகமாக முக்கியத் துவம் வழங்கப் பட்டுள்ளது. மெட்ராஸ் கல்லூரியின் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் என்பது அது.

இவ்வாறு பதிப்பிக்கப்பட்ட நாட்டார் கதைகள் 1840 அளவில் மதிப் பிழக்கத் தொடங்கின. இதற்கு பின்வரும் காரணங்கள் கூறப்படுகின்றன.

1. தமிழைப் படிக்க விரும்பிய வெளிநாட்டவருக்கு அதிகம் சந்தி விகாரங்களைக் கொண்ட தமிழை வாசிப்பது கடினமாக இருந்தது. அதாவது நாட்டார்கதைகளைப் பதிப்பித்த பண்டிதர்கள் ஓரளவுக்குக் கடினமான நடையையே கையாண்டனர்.

2. கதைகளில் வருகின்ற உள்ளடக்கங்கள் சம்பவங்கள் ஒழுக்க அடிப்படைகளில் நம்ப முடியாதனவாக ஐயத்திற் கிடமானவையாக இருந்தமை. ஒழுக்கத்தைக் கேள்விக் குரியதாக்கும் உள்ளடக்கங்கள் சில இக்கதைகளிற் காணப் பட்டதால் இவை பிரித்தானிய அதிகாரிகளின் மத்தியில் மதிப்பிழக்கத் தொடங்கின.

ஜோன் மர்டொக் முக்கியமாக இந்துக் கதைசொல்லும் மரபுக்கு எதிராக தன் போராட்டத்தை மேற்கொண்டார். பாடசாலை களுக்காக வெளியிடப்பட்ட இந்தக்கதைகள் பலதெய்வம், விதி போன்ற கருத்துகளைக்கொண்டு மக்களை ஏமாற்றுபவை என அவர் குறிப்பிட்டார். முக்கியமாக விலங்குகளை முக்கிய கதா பாத்திரங்களாகக் கொண்ட பஞ்ச தந்திரம் அவரது தாக்குதலுக் குள்ளானது. கதாமஞ்சரியும் அவ்வாறே தாக்குதலுக்குள்ளானது அது தந்திரங்களுக்கான சிறந்த உதாரணம் என்றும் அநாக ரிகத்தால் வாசனை யூட்டப்பட்டது என்றும் குறிப்பிட்டார். மர்டொக்கின் போராட்டத்தினால் கதாமஞ்சரி பாடசாலைக் கலைத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டதுடன் இனி ஒரு போதும் பாடசாலைக் கலைத்திட்டத்திற் சேர்க்கப் படக்கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இவற்றின் காரணமாக ஏற்கெனவே தொகுக்கப்பட்டுப் பாடநூலாக வைக்கப்பட்ட நாட்டார்கதைகள் உயர்நிலைப்பள்ளிகளின் பாடத் திட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. 1854 இலிருந்து சென்னைப் பல்கலைக் கழகத்தில் உயர்நிலைப்பள்ளியில் இவை கற்பிக்கப்படவில்லை. ஆயினும் மாணவர்களுக்கு உரை நூல்களைக் கற்பிக்க வேண்டும் என்ற தேவை காரணமாக நாலடியார் மற்றும் கம்பராமாயணச் சுருக்கங்கள் உரையில் எழுதப்பட்டு அச்சிடப்பட்டு பயிலக்கொடுக்கப்ட்டன.

இவ்வாறாக பிரித்தானிய நிர்வாக மட்டத்தில் இக்கதைகள் மதிப்பிழந்து போனாலும் 1900 ஆம் ஆண்டு வரை இவை எண்ணுக் கணக்கற்ற பதிப்புகள் வெளி வந்துள்ளன.

கதாசிந்தாமணி கொழும்பின் சிவில் அதிகாரிகளுக்காக 1863

இல் பதிப்பிக்கப்பட்டது. கதா மஞ்சரி 1850 இல் பெங்களூரிலும் சென்னைப் பொறியியல் கல்லூரியில் 1860லும் வெளியிடப் பட்டன. பஞ்சதந்திரம் தொடர்ந்தும் வெளியிடப்பட்டு வாசகர்களைக் கவர்ந்தது.

1864 கதாமஞ்சரியின் சிறுபதிப்பொன்று பாண்டிச்சேரியில் விசேட பாடசாலைகளின் தேவை களுக்காக என வெளியிடப் பட்டுள்ளது. 1932 இல் அரசாங்கத் தமிழ்ப் பாடசாலைகளின் உபயோகத்துக்கென மீளச்சுச் செய்யப்பட்டுள்ளது. முனைவர் ச.சிவகாமியால் தொகுக்கப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் என்ற நூலில் முப்பத்தியெட்டு நாட்டார்கதை நூல்கள் பதிப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

இக்கதைகளின் தலைப்புகளின் அடிப்படையில் அவற்றை மகா பாரத இராமாயணக் கதைகளின் சுருக்கங்கள் மேனாட்டுக் கதைகளின் சுருக்கங்கள் நாட்டார் உபகதைகள் என்பன இவற்றுள் அடங்குகின்றன.

**நாடகங்கள்**

நாடகங்களைப் பொறுத்தவரை அவை பெரும்பாலும் வாய் மொழியாகவே இருந்திருக்கின்றன. எனவே அக்காலத்தில் அரங் கேற்றப்பட்டு வந்த நாடகங்கள் பலவும் அக்காலத்தில் பதிப் பிக்கப்பட்டன. அவை ஏலவே வாய் மொழியிலிருந்து பதிப்பிக்கப் பட்டனவா அல்லது ஏடகளாக விருந்து பதிப்பிக்கப்பட்டனவா புதிதாக எழுதப்பட்டனவா என்பன போன்ற விடயங்கள் ஆராய்ச்சிக் குட்படுத்தப்பட வேண்டும்.

இந்நாடகங்கள் பெரும்பாலும் வாய்மொழியாக வழங்கி வந்த வழக்குக் கதைகளாகவும் (நல்லதங்காள் கதை, கோவலன் கதை) புராண இதிகாசக் கதைகளாகவும் உள்ளன. அரிச்சந்திரன் கதை 19 பேரால் சிறுசிறு மாற்றங்களுடன் பதிப்பிக்கப் பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது. இராமநாடகம் 11 பேரால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. நாடகங்கள் அடிக்கடி மேடையிடப் பட்டனவாதலால் அதன்தேவை அதிகமாக இருந்திருக்கலாம். சிவகாமியால் எழுதப்பட்ட பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியம் என்ற நூலில் 328 நாடகங்கள் அக்காலத்தில்

வெளிவந்ததாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த நாடகங்களுள் வடமொழிக்கதைகள் (அசோமுகி நாடகம் இரத்தினாவளி நாடகம்) மகாபாரத இராமாயணக்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் உ-ம் அபிமன்யு சுந்தரி நாடகம்.

நாட்டாரியல் பற்றிய கட்டுரைகள் இக்காலப்பகுதியில் நடேசசாஸ்திரி மட்டும் நாட்டாரியல் பற்றிய 50 கட்டுரைகளைத் தொகுத்துள்ளார். பழங் கதைகள் பற் றிய விளக்கங்கள் பழமொழிகள் நம்பிக்கைகள் தொடர்பானதாக அவை அமைந்துள்ளன. அவர் தொகுத்த நாட்டார் கதைகள் மக்களிடையே கவனத்தைப் பெற்றன எனக் கூறப்படுகிறது.

**பழமொழிகள்**

பழமொழி நானூறு தண்டலையார் சதகம் ஆகிய நூல்களுக்குப் பின்னர் பழமொழிகளின் தொகுப்பை மேற்கொண்டவர்கள் ஐரோப்பியப்பாதிரிமார்கள் ஆவர். பீற்றர் பேர்சிவல் பாதிரியாரினால் 1842 இல் தமிழ்ப் பழமொழிகளின் தொகுப்பு திருட்டாந்த சங்கிரகம் எனப் பெயரிடப் பட்டு (Tamil proverbs with their Translations) வெளியிடப் பட்டது. இதன் முதல்பதிப்பில் 1863 பழமொழிகள் இடம் பெற்றுள்ளன. 1874இல் இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. அதில் 6156 பழமொழிகள் இடம்பெற்றன. 1870 இல் பழமொழிகளைச சேகரித்து எச் டபிள்யூ லாரி என்பவர் வெளியிட்டார். சார்லஸ் ஈ.கோவர் என்பவர் தென்னிந்திய நாட்டுப்புறப் பாடல்களைச் சேகரித்து The folk song of southern India என்ற பெயரில்வெளியிட்டர்.

அவரைத் தொடர்ந்து லாசரஸ் ஜென்சென் முதலிய பாதிரி மார்கள் A Dictionary of Proverbs என்ற தலைப்பில் பழமொழிகளை வெளியிட்டார். இது 9417 பழமொழிகளைக் கொண்டது.

ஹெர்மன் ஜென்சன் 1897இல் A classified Collection of Tamil proverbs என்ற நூலை வெளி யிட்டார். இந்நூலில் 3644 பழமொழிகள் தொகுக்கப் பட்டுள்ளன. இத்தொகுப்புகள் தமிழ்கற்ற ஐரோப்பியர்களுக்காக வெளியிடப்பட்டன. அவை பைபிள்

கதைகளை விளக்கவும் மதமாற்றப் போதனைகளுக்கும் பயன்பட்டன எனப்படுகிறது.

இவர்களை விட ஐரோப்பியரல்லாதோரும் பழமொழித் தொகுப்புகளை வெளியிட முற்பட்டிருக்கின்றனர். அவ்வகையில் பின்வரும் தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

1873 இல் Tamil proverbs with their English Equivalents தட்சணாமூர்த்தி .

1874 மாணவர்களுக்கான தமிழ்ப்பழமொழிகளும் ஒத்த ஆங்கிலப்பழமொழிகளும் - இராமசாமிஐயங்கார்

1877 பழமொழிப்புத்தகம் எஸ் வேணுகோபால் நாயுடு 1888 பழமொழித்திரட்டு -குப்புசாமிநாயுடு கருப்பண்ணபிள்ளை.

1888 Handbook of Tamil proverbs and Phrases சக்தி நேசன் 1894 ஆங்கிலப் பழமொழிகளும் அவற்றிற்கு நேரான தமிழ்ப் பழமொழிகளும். - கிருஷ்ணசாமிச்செட்டியார்.

1899 Selected Tamil Proverbs with their appropriate English Version.- சபாபதிமுதலியார்

1899 Parallel proverbs- தி.செல்வக்கேசவராயர்

1902 பழமொழித்திரட்டு - பார்த்தசாரதிப்பிள்ளை

**விடுகதைத்தொகுப்புகள்**

விடுகதைகளின் தொகுப்பில் ஐரோப்பியர் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை. பின்வரும் நூல்கள் அக்காலத்தில் தொகுக்கப்பட்ட விடுகதைத் தொகுப்புகளாகக் கொள்ளப்படுகின்றன.

1877 -இருசொல் அலங்காரம் அருணாசல முதலியார்

1888 -இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் பெருமாள் நாடார்

1892 இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் கங்கை முத்துப்பிள்ளை- பெருமாள்நாடார்

1897 வினோத விடுகதை

1897 விவிலிய விடிகதைகள் - கிறிஸ்தவ சபை

1899 வினோத விடுகதை முனுசாமி முதலியார்

1903 வினோத விடுகதை பார்த்தசாரதிப்பிள்ளை

இந்நூல்களின் பதிப்பில் பல்வேறு குளறுபடிகள் நிகழ்ந்ததாகக்

குறிப்பிடப்படுகிறது. அதாவது முக்கியமாக இருசொல் அலங்காரம் முச்சொல் அலங்காரம் நூல்களிலேயே இக் குளறுபடிகள் நிகழ்ந்திருக்கின்றன. ஒருவரின் தொகுப்பை ஒருவர் மீண்டும் பதிப்பித்துள்ளார் எனத் தெரிகிறது.

**ஏனையவை**

இவற்றை விட கண்ணிகள் கும்மிகள் பலவும் அச்சிடப் பட்டுள்ளன. இந்தக் கண்ணிகளும் கும்மிகளும் நாட்டார் பாடல் வடிவங்களாகும் ஆனால் இவை முதலிலே எழுதப்பட்டுப் பதிப் பிக்கப்பட்டனவா வாய்மொழியாக இருந்த பதிப்பிக்கப்பட்டனவா அல்லது குறிப்பிட்ட ஆசிரிய ராலேயே எழுதப்பட்டனவா என்பனபோன்ற விடயங்கள் ஆராயப்படவேண்டியனவாகும்.

**நாட்டாரிலக்கியமும்**

**தேச அடையாளமும்**

இந்தியாவிலும் இலங்கையிலும் மற்றும் காலனித்துவ நாடுகள னைத்திலும் கிறிஸ்தவ மதப் பரம்பலும் பரப்பலும் பிரித்தானிய ஆதிக்கமும் சுதேசிகளிடையெ தமது அடையாளங்களைத் தேடுவதற்கு தூண்டுதலளித்தன. பதிப்புகளில் ஈடுபட்டோர் தேசாபிமானம் பாஷாபிமானம் ஆகியவற்றுக்கு முக்கியமளித்தே பதிப்புகளை மேற்கோண்டனர் என்பது சி. வை. தாவின் கலித் தொகை முன்னுரையாலறியப்படும். அதன் காரணமாகத்தான் சமய இலக்கியங்கள் சுதேச மொழிகளின் பண்டைய இலக்கிய இலக்கணநூல்கள் கண்டெடுக்கப் பட்டுப் பதிப்பிக்கப்பட்டன. இவற்றைவிட இந்நாடுகளின் பண்பாடு சமயம் நாட்டார் வழக்காறுகள் பற்றிய மேனாட்டாரின் தேடலு'ம் இந்நூல்களின் பதிப்பிற்கு முக்கிய காரணமாகும். ஆங்கிலம் கற்ற தமிழர்கள் தம்மிடமும் சிறந்த இலக்கிய இலக்கணநூல்களும் வாய்மொழி இலக்கியங்களும் இருக்கின்றன என்பதை மேனாட்டவருக்கு நிலை நிறுத்து வதில் பெருமை கொண்டனர்.

19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கல்வியில் வெளி நாட்டார் தமிழைப்படிக்கும் முறைமாறி உள்நாட்டவரும் வெளி நாட்டவரும் ஆங்கிலத்திலேயே கற்கும் நிலை தோற்றுவிக்கப பட்டது. அதனால் தமிழிலே

பதிப்பிக்கப்பட்ட நாட்டார் கதைகள் பாடசாலைகளுக்குத் தேவைப்படாமல் போயின. அந்த நிலையில் இக்கதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கான தேவை ஒன்று உருவானது ஆர்வம்மிக்க ஆங்கிலப் புலமையாளர் மொழி பெயர்ப்பில் ஈடுபட்டனர். அவர்கள் நாட்டாரியல் வழக்காறுகள் தொடர்பாகவும் தங்கள் கவனத்தைச் செலுத்தி அவைதொடர்பான கட்டுரை களையும் நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டனர்.

நாட்டார் வழக்காறுகள்

முதன் முதலாகத் தமிழ் நாட்டார் வழக்காறுகளைச் சேகரித்தவர் பார்த்தலோமியோ சீகன்பால்கு என்பவராவர் அவர் 1813 இல் மலபார் மக்களின் கடவுளரின் குடிவழிப்பட்டியல் என்னும் நூலை எழுதினார். இந்நூல் 1867 இல் சென்னையில் வெளியிடப்பட்டது. தொல்லியல் ஆரரய்ச்சிக் கழகத்தில் பணியாற்றிய நடேசசாஸ்திரி றொபெட் சிவெலின் உதவியாளராக இருந்தவர். நாட்டார் வழக்காறுகள் பற்றி 50 கட்டுரைகளை எழுதியுள்ளா ரெனப்படுகிறது. இலங்கையில் சைமன் காசிச்செட்டி இவ் வகையில் பல கட்டுரைகளை எழுதியுள்ளார் நடேச சாஸ்திரியின் Folklore of Southern india (மூன்று தொகுதிகள்1884-1888) இல் வெளியிடப்பட்டது. இத்தொகுதியே ஆங்கிலத்தில் வெளிவந்த தமிழில் வழங்கிய நாட்டார் கதைகளின் முதலாவது தொகுப்பாகும். அவ்வாறு தொகுத்தபோது அதன் முன்னுரையில் தேசம் பற்றிய எண்ணக்கருவில் நாட்டார் வழக்காற்றியலின் இடம்பற்றி அழுத்திக் கூறியுள்ளார் 1886இல் நடேச சாஸ்திரி பதிப்பித்த இன்னொரு நூலில் பின்வருமாறு றியுள்ளார்.

தமிழ்க்கதைகள் அவற்றின் சிந்தனைச் செழுமையில் அறத்தை வலியுறுத்துவதில் கற்பனையின் வளமையில் எந்த வகையிலும் கீழைத் தேயத்தின் ஏனைய மனோரதியக்கதைகளிலும் குறைந்தனவல்ல.

இந்தச் சிந்தனையானது சுதேசிகள் நாட்டார் இலக்கியங்களை விளங்கிக்கொண்ட முறைக்கு அப்பால் மேனாட்டவருக்குத் தங்கள் இலக்கியம்பற்றி

விளங்கப்படுத்தும் விசேடமான முயற்சியை வெளிப்படுத்துகின்றது. நாட்டாரிலக்கியங்கள் மற்றும் நாட்டார் வழக்காறுகள் இந்திய அடையாளமான. இந்து மரபுகளைத் தேசியமயமாக்கும் பணியில் முக்கியம் பெற்றன என்ற கருத்தும் உண்டு. இலங்கையில் சைமன் காசிச்செட்டி நாட்டார் வழமைகள் பலவற்றைக் கட்டுரைகளாக வெளியிட்டார்.

ஐரோப்பிய தேசிய வாதத்துக்கும் ஐரோப்பிய நாட்டார் கதைகளின் தொகுப்பு முக்கிய இடம் பெற்றது என்பதை ஸ்ரூவட் பிளக்மான் எடுத்துக் காட்டுவார். பிரித்தானியாவில் தொடங்கப்பட்ட நாட்டாரியற்கற்கை இந்தியாவில் பரவத்தொடங்கியது. 1878 இல் லண்டனில் தொடங்கப்பட்ட நாட்டாரியற்கழகம் முக்கியமான சஞ்சிகைகளை வெளியிட்டது. சென்னையிலிருந்த புலமையாளர்கள் இதனுடன் தொடர்பு கொண்டு தமது ஆராய்ச்சிகளை வெளியிட்டனர்.

எனவே பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நாட்டார் இலக்கியப்பதிப்புகளைப் பற்றித் தொகுத்து நோக்கும்போது பின்வரும் தேவைகள் காரணமாக அவை பதிப்பிக்கப்பட்டுள்ளன.

1.ஆங்கிலேயரின் நிர்வாகத் தேவைக்கானதும் மதத் தேவைக்குமான கல்வித்தேவை

2.ஆங்கிலேயர் இந்திய சமூகத்தை விளங்கிக் கொள்வதற்கான ஒரு சாதனமாக அவற்றைக் கருதியமை

3.சுதேசிகளின் தேசிய அடையாள ஈர்ப்பு.

4.சுதேசிகளில் ஆங்கிலம் படித்தோரின் ஆசை

எனினும் அக்காலத்தில் பதிப்பிக்கப்பட்ட சில தொகுதிகளைப் பொறுத்தவரை அவற்றின் உண்மையான ஆசிரியர் யார் நாட்டார் இலக்கியங்களை எங்கிருந்து பெற்றார்கள் அவை உண்மையில் நாட்டார். இலக்கியங்கள்தானா என்பது போன்ற விடயங்கள் ஆராயப்பட வேண்டியவையாகவுள்ளன.

பேராசிரியர் கலாநிதி அம்மன்கிளி முருகதாஸ்
மொழித்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

# இதண்டி வரும் இதண்டு

# இதண்டு பற்றிய ஒரு மொழியியல் நோக்கு

**தொடர்ச்சி....**

**5. சொல்லும் பொருளும்**

'இதண்டு' என்பதற்குப் பொருள் இல்லை. பயன்படுத்தப்படும் சூழமைவுக்கு ஏற்ப அது பொருளைப் பெற்றும் வழங்கியும் வருகின்றது.

தமிழில் ஒரு பொருள் குறித்த பல சொல், பல பொருள் குறித்த ஒரு சொல் என்ற ஒரு வகைப்பாடு உள்ளது.

உதாரணம்: (1) ஒரு பொருள் குறித்த பல சொல்

கடல் ஸ்ரீ ஓதம், சாகரம், பரவை, புணரி, வாரி, வேலை, உவரி

(2) பலபொருள் குறித்த ஒரு சொல்

கவி ஸ்ரீ பாட்டு, கவிதை, புலவன், குரங்கு

இவை தவிர வாக்கிய நிலையில் சொற்கள் தொழிற்படுவதைக் கொண்டு அவை எந்தவகையைச் சார்ந்த சொற்கள் என்றும் வகைப்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணம்: 'படி' வினையாகவும், பெயராகவும், இடையாகவும் தொழிற்படுகின்றது.

மேற்கூறிய வகைப்பாடுகள் கூறப்பட்டமைக்குக் காரணம், அவற்றால் குறிப்பிட்ட எல்லைக்கு அப்பால் சென்று பொருள் வழங்கவோ வாக்கியத்தில் செயற்படவோ முடியாது. இத் தன்மைகளில் இருந்து சற்றுவேறுபட்ட பண்பைக் கொண்டதாகவே 'இதண்டு' தொழிற்படுவதைக் காணலாம்.

ஆனால், 'இதண்டு' எப்பொழுதும் ஒரு வினையாகவே தொழிற்படுகின்றது. அதேவேளை, அதன் பயன்பாடும் பொருள் கொள்ளலும் வரையறைக்குட்பட்டதாகவும் இல்லை.

பேசுபவர் என்ன நினைத்துப் பேசுகிறார். கேட்பவர் என்ன பொருளில் விளங்கிக் கொள்கிறார்É தொடர்பாடல் நடைபெறும் சூழமைவில் அது என்ன பொருளைப் பெற முடியுமோ, அந்தப் பொருளையே 'இதண்டு' என்ற வினைச் சொல் பெற்று, வழங்கி வருவதைக் காணமுடிகிறது.

சில உதாரணங்கள் மூலம் இதை விளங்கிக் கொள்ளலாம்.

(1) சோறு ஆக்கிக் கொண்டிருக்கும் போது தண்ணீர் கூடுதலாக விட்டதாலோ, கூடுதலான நேரம் அடுப்பில் இருந்ததாலோ சோற்றை

உரிய பதத்தில் இறக்க முடியாது போன வேளையில் "சோறு இதண்டிப் போச்சு" என்பர்.

இங்கு, இறக்கிய சோற்றைப் பார்த்து அது குழைந்துவிட்டது அல்லது அடிப்பிடித்து விட்டது என்ற பொருளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

(2) வீடியோக் கசட்டை டெக்கிற்குள் போட்டதும் அது எதுவித தொழிற்பாடும் இன்றி இருக்கும் வேளையில் ஒருவர் இன்னொருவரிடம்,

'கசட்டை எடுத்து இதண்டிப் போட்டுப் போடு'

எனக் கூறும்போது, கசட்டைச் டெக்கில் இருந்து வெளியே எடுத்துச், சற்றுக் குலுக்கிவிட்டு, சற்றுச் சுத்தம் செய்துவிட்டு, திறந்து நாடாவை முன்னோக்கிக் கடத்திச் சுற்றிவிட்டு மீண்டும் போடலாம் என்பதை அது குறித்து நிற்கும்.

(3) இராணுவத்திடம் பிடிபட்டு விடுவிக்கப்பட்ட பெண்ணொருவரை ஊடகத்துறையினர் நேரடிப் பேட்டி கண்ட வேளையில்,

'அவங்கள் எங்களப் பிடித்து இதண்டிப் போட்டு விட்டாங்கள்'

என்று கூறுகிறாராயின், இராணுவத்தினர் அப்பெண்ணைப் பிடித்துச் சோதனை செய்துவிட்டோ, விசாரித்துவிட்டோ, குற்றம் புரிந்துவிட்டோ விடுவித்தார்கள் என்று எந்தப் பொருளை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம்.

இவற்றைப் போலப் பல்வேறு சூழமைவுகளில் 'இதண்டு' என்பது வந்து, தொடர்பாடல் தேவையைப் பூர்த்தி செய்கின்றது.

இக்கட்டுரையின் தலைப்புக்கூட இதற்கு நல்ல ஓர் உதாரணம். 'இதண்டி வரும் இதண்டு' என்பதில் 'இதண்டு' என்பது பெருகி, வளர்ந்து, அதிகரித்து, பயிலப்பட்டு வரும் என்று பல்வேறு பொருட்களைப் பெற்று வரலாம்.

இங்கே மிக முக்கியமான விடயம் என்னவெனில் மேற்கூறிய பொருட்கள் இதண்டுக்குரிய பொருட்கள் அல்ல என்பதை மனதிற்கொள்ள வேண்டும்.

6. சொற்பயன்பாட்டிற்கான காரணங்கள்

ஒரு குறிப்பிட்ட பொருளை மட்டும் மையப்படுத்தி 'இதண்டு'

என்பது பயன்படுத்தப்படுவதில்லை என்பதைப் பார்த்தோம். தொடர்பாடல் வேளையில் அது பயன்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளதை அறிய முடிகிறது. அவை உடல், உள பலவீனங்களோடு தொடர்புபட்டவையாகவும் இருக்கக் கூடும்.

(1) ஒரு சொல் ஞாபகத்திற்கு வராதிருத்தல்.

தொடர்பாடலின் போது குறிப்பிட்ட சூழமைவில் பயன்படுத்தப்பட வேண்டிய சொல் ஞாபகத்துக்கு வராதவுடன் தொடர்பாடலைப் பூர்த்தி செய்யுமுகமாக இச் சொல் பயன்படுத்தப்படுகின்றது.

(2) சொல்லுவதற்குச் சொல் தெரியாது போதல்

சில வேளைகளில் சிலபேருக்குச் சொற்பஞ்சம் ஏற்படுவதுண்டு. சில செயல்களை அதிகம் பாவனையில் இருக்காத, பழக்கப்படாத செயல்களை சொல்வதற்கு சொற்கள் உடன் வருவதில்லை. அத்தருணங்களில் எல்லாம் இதண்டு கைகொடுக்கின்றது.

(3) சொல்ல முடியாததைச் சொல்லல்

சபையறிந்து பேச வேண்டும். எல்லா விடயத்தையும் எல்லார் முன்னும் சொல்ல முடியாது. அந்த வகையில் சூழமைவில் சொல்லமுடியாத விடயங்ளை செயல்களை சொல்லவும் இதண்டு பயன்படுகின்றது.

7. முடிவுரை

முடிவாக, பேச்சுவழக்கில் மட்டும் பயின்றுவரும் 'இதண்டு' ஒரு வினைச்சொல்É பொருட்களை வாங்கி வழங்கும் வெற்று வினை வங்கிÉ தொடர்பாடல் தேவையைப் ர்ரத்தி செய்யும் ஒரு மொழிக்கூறு என்பது புலப்படுகிறது.

மார்க்கண்டு ரூபவதனன்
விரிவுரையாளர்,
ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக் கழகம்,
பதுளை.

# வைணவ பக்தி இலக்கிய வரலாற்றில் பெரியாழ்வார் பெருமை

**தொடர்ச்சி....**

பெரியாழ்வார் பக்திச் சிறப்பும் பகவான் மீது கொண்ட அதீத பற்றுமே இதற்குக் காரணமாய் அமைகிறது. இதைத் தொடர்ந்து இரண்டாம் பாடலில் உன்னோடு சேர்ந்து உன் அடியவர்களாகிய நாங்கள் உன் மார்பில் வாழ்கின்ற லட்சுமி உன் சக்கரம், சங்கு எல்லாமே பல்லாண்டு வாழ்க என்கிறார். இதனூடாக பகவான் வாழ்ந்தால் எல்லாம் வாழும் என்ற கருத்தும் பெரியாழ்வாரின் பரந்த சிந்தனையும் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றது.

"வாழாட்பட்டு நின்றீர் உள்ளீரேல் வந்து
மண்ணும் மணமும் கொண்மின்....." என அமையும்

மூன்றாவது பாசுரத்தினூடாக பெருமானுக்கு சேவை செய்யவருமாறு ஏனைய அடியவர்களையும் அழைக்கின்ற தொண்டும் சிறப்பை வெளிப்படுத்துகின்ற பெரியாழ்வாரின் பக்தி உணர்வைக் காணமுடிகின்றது.

இத் திருப்பல்லாண்டுப் பகுதியினூடாக பெரியாழ்வார் கண்ணன் மீது தான் கொண்ட பக்தி அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளதுடன் வைணவ வழிபாட்டுச் சின்னங்களின் பெருமைகள் பகவான் பல்லாண்டு வாழ வேண்டியதன் நியாயம், தான் பெற்ற பக்தி அனுபவத்தை ஏனைய அடியவர்களும் பெற்று அனுபவிக்க அவர்களையும் அழைக்கும் தன்மை கண்ணனுடைய பக்தி அனுபவத்தில் ஈடுபட்டால் பிறவிப்பயனை அடையலாம் நிலையற்ற உடலைக் கொண்டு நிலையான இன்பம் அடையலாம் போன்ற விடயங்களைக் கூறியுள்ள தன்மை இன்று நேற்று அல்லாமல் வழி வழி மரபாக கண்ணனைத் தாம் வழிபட்ட சிறப்பு, கண்ணனுடைய அவதாரப் பெருமைகளைக் கூறிப்பாடும் தன்மை போன்றனவற்றையும் வெளிப்படுத்தியுள்ளார்.

கண்ணனின் திரு அவதாரச் சிறப்பை பெரியாழ்வார் பாடியது திருக்கோட்டியூரிலேயே ஆகும். அங்கு அவர் ஒரு கிருஸ்ணஜெயந்தியன்று தன் நண்பரான செல்வநம்பியை காணவந்தபோது அங்கிருந்த பெருமாள் கோயிலைக் கண்டு வழிபட்டார். பின்னர் அக்கோயிலை நந்தகோபரின் மாளிகையாகவும் அவ் ஊரை ஆயர் பாடியாவும், அப்பெருமானைக் கண்ணக் குழந்தையாகவும் தன்னை கண்ணனின் வளர்ப்புத் தாயாகிய யசோதையாகவம் பாவனை செய்து கண்ணனின் அவதாரச் சிறப்புக்களையும் குறும்புகளையும், லீலைகளையும் அதனால் தானும் மற்றவர்களும் அடைந்த மகிழ்ச்சியையும் பாடியுள்ளார். இங்கு எத்தனையோ உறவுமுறை இருந்தபோதும் பெரியாழ்வார் தாய்மை உணர்ச்சியையே பக்தி உணர்ச்சியாக வெளிப்படுத்தியுள்ளார். இந்த உலகில் குழந்தை மீது அதிகமாக பாசம் வைக்கக் கூடிய என்னத உறவு தாய் என்ற காரணத்தினாலும் தனது பக்தியை எந்தவித தடைகளுமின்றி சுதந்திரமாகவும், மிகவும் நெருக்கமாகவும் வெளிப்படுத்த இவ் உறவு

முறையால்த்தான் முடியும் எனக் கருதியதாலும் ஆண்டாளை ஒரு தாயாகவும் நின்று வளர்த்த அனுபவத்தின் சிறப்பாலும் அவர் இவர் உறவைத் தேர்ந்தெடுத்திருக்கலாம் இவ் வகையில் இறைவனை அரசனை குழந்தையாக்கி பருவங்களிற்கூடாக பாடி மகிழ்கின்ற பிள்ளைத்தமிழ் என்ற இலக்கிய வகையின் ஊற்றுக்கண்ணாய் விளங்கிப் பெரியாழ்வார் திருமொழிப் பாடல்கள் சிறப்புப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக.

"தன்முகத்துச் சுட்டி தூங்கத் தூங்க தவழ்ந்து போய்
பொன்முகக் கிண்கிணி ஆர்ப்ப புழுதி அளைகின்றான்
என் மகன் கோவிந்தன் கூடத்தினை இளமாமதி
நின்முகம் கண்ணுளவாகின் நீ இங்கே நோக்கிப்போ"
என்ற பாடலைச் சுட்டலாம்.

ஆக்கியோரான பெரியாழ்வார் பெயரை முன்னிட்டு அவரது பிரபந்தம் ஒன்றிற்கு பெரியாழ்வார் திருமொழி என்ற பெயர் வழங்குகிறது. நாச்சியார் திருமொழி, பெருமான் திருமொழி ஆகியனவும் இவ்வாறு பெயர் பெற்ற நூல்களே ஆகும். "திருமொழியாய் நின்ற திருமாலே" (இரண்டாம் திருவந்தாதி 64) என. பகவானைப் பாடுகிறார் பூதத்தாழ்வார். திருமொழியாய் நின்றவனையே பெரியாழ்வார் தம் நூலிற்கு பொருளாகக் கொண்டமையினால் அவர் நூலும் திருமொழி எனச் சிறப்புப் பெற்றது.

பெரியாழ்வார் திருமொழியில் 10 அல்லது 11 பாசுரங்கள் கொண்ட 43 பதிகங்கள் உள்ளன.

பதிகம் ஒவ்வொன்றும் வைணவ மரபுப்படி 'திருமொழி' எனப் பெயாபெறும். பத்துத்திருமொழிகள் கொண்ட ஒரு தொகுதி 'பத்து' எனக் குறிக்கப்பெறும். இதன்படி பெரியாழ்வார் திருமொழியில் உள்ள பத்துகள் ஐந்தாகும். ஐந்தாம்பத்து நிறைவுபெறவில்லை: நான்கு திருமொழிகளுடன் முடிவடைகின்றது. இவ்வைந்து பத்துகளிலும் உள்ள பாசுரங்களின் மொத்த எண்ணிக்கை 461 ஆகும்.

முதற்பத்தில் உள்ளவை ஒன்பது திருமொழிகள் (பதிகங்கள்) மட்டுமே. 'சீதக்கடலுள்' எனத்தொடங்கும் இதன் இரண்டாம் திருமொழி பதிகத்திற்குரிய எல்லையைக் கடந்து 21 பாசுரங்களைக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் பத்திலுள்ள மூன்றாம் திருமொழி 13 பாசுரங்கள் கொண்டுள்ளது. 'பன்னிரு திருநாடப்பாட்டு' ஆதலின் பலன்கூறும் (பலசுருதி) பாட்டையும் சேர்ந்து அதன் எண்ணிக்கை பதின்மூன்று ஆயிற்று. இவ்விரண்டு திருமொழிகளையும் தவிர ஏனைய திருமொழிகள் யாவும் 10 அல்லது 11 பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இனி இத்திருமொழிகளின் உள்ளடக்கம் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்குகின்றது. பெரியாழ்வார் திருமொழி. மூன்றாம்பத்து ஆறாந்திருமொழி முடிய - முதல் இருபத்தைந்து திருமொழிகளில் கண்ணனது பிள்ளைமைக் குணங்களிலும் இளம்பருவச் செயல்களிலும் ஆழ்வார் ஈடுபடுகின்றார். பெரும்பாலான திருமொழியின் புறக்கட்டமைப்புப் பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய செய்தி இது.

இனி, இத்திருமொழிகளின் உள்ளடக்கம் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

கண்ணனின் அவதாரச் சிறப்புடன் தொடங்குகின்றது. பெரியாழ்வார் திருமொழி. மூன்றாம்பத்து ஆறாந்திருமொழி முடிய- முதல் இருபத்தைந்து திருமொழிகளில் கண்ணனது பிள்ளைமைக் குணங்களிலும் இளம்பருவச் செயல்களிலும் ஆழ்வார் ஈடுபடுகின்றார். பெரும்பாலான திருமொழிகளில் கண்ணனின் வளர்ப்புத்தாய் அசோதையாகவே ஆழ்வார் தம்மைப் பாவித்துக்கொண்டு பேசுகின்றார்.

இப்பாவனா சக்தியினால் கண்ணனின் அவதாரம் தொடங்கி அதில் உண்டான சுவையெல்லாம் ஒன்றுவிடாமல் அனுபவிக்கின்றார்.

'வண்ணமாடங்கள், என்னும் முதல் திருமொழி (1 - 1) கண்ணனின் திருஅவதாரங்ளையும் அதனால் ஆய்ப்பாடியில் நிகழ்ந்த கொண்டாட்டங்களையும் வருணிக்கின்றது.

'சீதக்கடலுள்' என்னும் இரண்டாம் திருமொழியில் (1-2) கண்ணனின் கமலபாதம் தொடங்கித் திருமுடி ஈறாக அவனது அழகினைப் பாதாதிகேசமாக அனுபவிக்கின்றாள். அசோதை. தனனைப் போலவே அவனழகை அனுபவிக்க விரும்பிய ஆய்ப்பாடிப் பெண்களையும் அழைக்கின்றாள். 'பாதக்கமலங்கள் காணீரே, பவளவாயீர்! வந்து காணீரே! என்னும் முறையில் இத்திருமொழி நடக்கின்றது.

'மாணிக்கம் கட்டி' என்னும் மூன்றாம் திருமொழியில் (1-3) அசோதை ,கண்ணனைத் தொட்டிலிலிடடுத் தாலாட்டுகின்றாள்.

"மாணிக்கம் கட்டி வயிரம் இடை கட்டி
ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச் சிறுத்தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுந்தான்;
மாணிக் குறளனே! தாலேலோ!
வையம் அளந்தானே! தாலேலோ!"
(விடுதந்தான் - கொடுத்தனுப்பினான்)

என்று அவளின் தாலாட்டு - தொடங்குகின்றது.

அதன்பின்னர் 'தன்முகத்து' (1 - 4) 'உய்யவுலகு' (1-5), 'மாணிக்கக்கிண்கிணி' (1-6) 'தொடர் சங்கிலிகை' (1-7) 'பொன்னியல் கிண்கிணி' (1-8), 'வட்டுநடுவே' (1-9) என்னும் ஆறு திருமொழிகளிலும் முறையே கண்ணனுக்காகச் சந்திரனையழைத்தால்; கண்ணன் செங்கீரையாடுதல்; சப்பாணி கொட்டுதல்; தளர்நடை நடத்தல்; தானே ஓடிவந்து தாயை அணைந்து கொள்ளுதல்; தாயின் பின்புறமாக வந்து அவள் முதுகினைத் தழுவி நிற்றல் ஆகிய செயல்கள் பேசப்படுகின்றன.

இவ்வொன்பது திருமொழிகளுடன் முதற்பத்து முடிகின்றது.

இரண்டாம்பத்தின் முதல் திருமொழியான, மெச்சூதுசங்கம்' (2-1) கண்ணன் அப்பூச்சிகாட்டி விளையாடுவதை விவரிக்கின்றது. இதனைத் தொடர்ந்து வரும் பதினைந்து திருமொழிகளிலும் - மூன்றாம்பத்து ஆறாந்திருமொழி முடியக் கண்ணனைத் தாய்ப்பால் உண்ண அழைத்தல், காதுகுத்துதல், நீராட்டுதல், குழல்வாரக் காக்கையை அழைத்தல், காக்கையைக் கோல் கொண்டு வாவெனல், பூச்சூட்டுத், காப்பிடுதல், ஆய்ச்சியர்கள் கண்ணனின் செயல்கள் குறித்து

அசோதையிடம் முறையிடுதல், கோபியர் கண்ணனின் தீம்புகளைச்சொல்லி, 'உன் மகனாலே நாங்கள் இன்று முடிந்தோம்' என்று முறைப்படுல், அசோதை தன் பிள்ளையின் மானிடத்தன்மைக்கு அபபாற்பட்ட வியத்தகு செயல்களைக் கண்டு பால்கொடுக்க அஞ்சுதல், அதனை மறந்து மகனென்றெண்ணி அவனைக் கன்றுகளின் பின்னேபோக்கியதை எண்ணி இரங்குதல், அவன் மாலையில் மீண்டுவரும் கோலங்கண்டு மகிழ்தல், கன்னியர் கண்ணனைக் கண்டு காமுறுதல், கண்ணன் கோவர்த்தன மலையைக்குடையாக எடுத்தல், கண்ணனின் குழலோசை கேட்டுக் கோபியரும் மண்ணவரும் விண்ணவரும் எல்லா உயிரினங்களும் மயங்கி நிற்றல் - ஆகியவை நூற்றுக்கு மேற்பட்ட பாசுரங்களில் மிக ஆழகாய் வருணிக்கப்படுகின்றன.

இம்மூன்றாம் பதது ஆறாந் திருமொழியுடன் ஆழ்வாரின் கிருஷ்ணாநுபவம் நிறைவடைகின்றது. எனினும் மேல்வரும் இரண்டு திருமொழிகளில் இவ்வனுபவர் வேறுவகையாக வெளிப்படுகின்றது.

'ஐயுபுழுதி' என்னும் ஏழாந்திருமொழி (3 -7), மாயவன் மேல் மால்கொண்ட மகளின் நிலை குறித்துத் தாய் இரங்கும் பாசுரமாய் அமைந்துள்ளது.

'நல்லதோர் தாமரை' என்னும் எட்டாந்திருமொழியில் (3 - 8) கண்ணனோடு சென்ற மகளைக் குறித்து தாயானவள் வருந்துகின்றாள்.

இவ்விரு திருமொழிகளும் நற்றாய் இரங்கல், உடன்போக்கு என்னும் தமிழ் அகப்பொருள் துறைகளைத் தழுவியமைந்தவை.

'என்னதான்' என்னும் ஒன்பதாம் திருமொழியில் (3 -9), ஆயர் மங்கையர் இருவருள் ஒருத்தி கண்ணனைப் பாடுகின்றாள். மற்றொருத்தி இராமனைப் பாடுகின்றாள். அவ்விருவரும் உந்தி பறத்தல் என்ற விளையாட்டின்படி ஒருவர்க்கொருவர் எதிர்நின்று ஆடிப்பாடுகின்றனர்.

'நெறிந்த கருங்குழல்' என்னும் பத்தாம் திருமொழி (3 -10) இலங்கைக்குச் சென்ற அனுமன் சீதையிடம் கூறிய அடையாளங்களைத் தொகுத்துரைக்கின்றது.

இத்துடன் மூன்றாம்பத்து முடிகின்றது.

'கதிராயிரம்' என்னும் நான்காம் பத்தின் முதல் திருமொழியில் (4 - 1) இறைவனைத் தேடுவாரும் - அவனைக் கண்டவர் சிலருமாக - அவர்கள் பெற்ற அனுபவம் பேசப்படுகின்றது. 'எம்பிரானைக் கண்ணாலே காணவேண்டும்' என்று தேடுவதை ஒருபிரிவாகவும், 'அப்படி நீங்கள் தேடினால் அவனை உள்ளபடி கண்டவரும் உண்டு' என்று விடை கூறுதலை ஒருபிரிவாகவும் கொண்டு பாசுரமிடுகின்றார்.

நாந்தகம் சங்கு தண்டு நாண் ஒலிச்சார்ங்கம் திருச்சக்கரம் ஏந்துபெருமை இராமனை இருக்குமிடம் நாடுதிரேல், காந்தள் முகிழ்விரல் சீதைக்காகிக் கடுஞ்சிலை சென்று இறுக்க வேந்தர் தலைவன் சனகராசன்தன் வேள்வியிற் கண்டாருளர்' இவ்வாறு 'திருமாலைக்கண்ட சுவடு உரைத்தல்' என்னும் முறையிலேயே இதில் உள்ள பாசுரங்கள் யாவும் அமைந்துள்ளன.

கிருஷ்ணாநுபவம்
பக்திநெறிக் கவிஞர்கள் - இறைவன் தன் அடியார்களிடத்துக் காட்டும் பிரிவினுக்குத் தாயின் அன்பை உவமையாகச் சொல்வதுண்டு. 'பெற்றதாயினும் ஆயின செய்யும்' என்று திருமங்கை மன்னனும், 'பால் நினைத்தூட்டும் தாயினும் சாலப்பிரிந்துரு' என்று மணிவாசகரும் பாடியிருத்தல் காண்க. இப்பொழுது மரபுக்கு மாறாகப் பக்தன் தன்னைப் பரிவுடைய தாயாகவும் இறைவனைத் - தன் அன்பினைச் சொரிந்து வளர்க்கும் சேயாகவும் காண்பது புதும அல்லவா? இப்புதுமையைத் தமிழிப் பக்தி உலகம் கி.பி எட்டாம் நூற்றாண்டில் கண்டது. அங்ஙனம் 'பகவானை வளர்த்த பக்த'ராக நமக்குக் காட்சி தருபவர் பெரியாழ்வாரே. இந்தியப் பக்தி மரபில் பெரியாழ்வாருக்கு முன்பு வேறு யாரும் இப்புதுமையைச் செய்ததாகத் தெரியவில்லை.

இத்தகைய வித்தியாசமான அணுகுமுறையில் இறைவனைப் பார்க்கவும் பக்தி இலக்கியம் படைக்கவும் அவருக்குக் கைகொடுத்து உதவியது கண்ணனின் கதையே 'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்து' கண்ணனின் கதையே. வடமதுரையில் வசுதேவர் மகனாய்ப் பிறந்து ஆய்ப்பாடியில் நந்தன் குலமதலையாய் வளர்ந்து கண்ணனின் கதை இந்திய மண்ணிற் பிறந்து எல்லார்க்கும் தெரிந்த கதையன்றோ? ஆனால் இக்கதையைப் பெரியாழ்வார் அணுகிய முறைக்கும் மற்றவர்கள் அணுகிய முறைக்கும் வேற்றுமை உண்டு.

கிருஷ்ணசரித நிகழ்ச்சிகளைத் தம் கவிதைகளிற் பாடியோர் பலரும் பாலகிருஸ்ணனாகவும் பாண்டவர் தோழனாகவும் அவன் புரிந்த வியத்தகு நிகழ்ச்சிகளில் மனம் பறிகொடுத்தே பக்தி செலுததியிருக்கின்றனர். அவர்களது கிருஷ்ண பக்திக்கும் பெரியாழ்வார் குழந்தைக் கண்ணன் மீது காட்டிய பொங்கும் பிரிவுக்கும் நெடுவாசியுண்டு. அது மலைக்கும் மடுவுக்கும் உள்ள வேற்றுமை போன்றதாகும்.

கண்ணனைகப் பெற்றவளோ அவனை வளர்க்கும் பேற்றினை இழந்தாள். வளர்த்தவளோ அவன் தேவகி மகன் என்ற உண்மை தெரியாமலேயே தன் வயிற்றிற் பிறந்த மகனாகவே கருதி வளர்த்தாள். அந்த அசோதைக்கு வாய்த்த பேறுதான் எத்தகையது! பெற்றவள் குழந்தை பிறந்த மறுகணமே தன் குழந்தையைப் பிரிய, மற்றவளோ அவனுக்குப் பாலூட்டி தாலாட்டி அம்புலி காட்டி வளர்க்கும் பேற்றினைப் பெற்றாள். சேய்வளர் காட்சியின்

சீர்மையையெல்லாம் ஒன்றுவிடாமல் கண்டு அனுபவித்து, அளவில்லாத பிள்ளையை இன்பத்தைப் பெற்றாள். எனவே அவ் - அசோதையைத் 'தெய்வநங்கை' எனப்போற்றினார் குலசேகராழ்வார். தெய்வமே தன்னிடம் வந்து குழந்தையாக வளர - அதைக் கண்ணிநுண் கயிற்றால் கட்டவும் அடிக்கவும் படியான பேறு அசோதை ஒருத்திக்கு மட்டுமே வாய்த்தது. அவன் அசோதையிடம் வளர்ந்த காலத்தில் நிகழ்ந்த பிள்ளையைச் செயல்களையெல்லாம் எண்ணிப்பார்த்து - அவற்றுள்

ஒன்றையும் தான் காணப்பெறாத குறையை நினைந்து அவனைபெற்ற தாயான தேவகி புலம்பியிருப்பாள் அல்லவா? அப்புலம்பலை 'ஆலைநீள்கரும்பு" என்னும் திருமொழியில் கற்போர் உள்ளம் உருகுமாறு வெளியிடுவார் குலசேகராழ்வார். அத்திருமொழியில்.

"திருவிலேன் ஒன்றும் பெற்றிலேன் எல்லாம்
தெய்வ நங்கை அசோதை பெற்றாளே!"

என்று தனக்கேற்பட்ட இழவைக்குறித்து வருந்திப் பேசுவாள் தேவகி 'ஒன்றும் பெற்றிலேன்' என்று தேவகிப்பிராட்டியார் இழந்ததையெல்லாம் பெற்று மகிழ்ந்தவள் தெய்வநங்கை அசோதை. அந்த அசோதை பெற்றதையெல்லாம் தம் அன்புப் பெருக்காலே பெற்று மகிழ்ந்தவர் பெரியாழ்வார்.

இந்தப் பேற்றுக்கு யாது காரணம்? அந்தணர் குடிப்பிறந்த - வேயர் குலவிளக்கான ஆழ்வார் பாவனா சக்தியினால் இடைக்குலப் பிறப்பை ஏறிட்டுக் கொண்டார். தம்மை ஆய்க்குலத்துப் பெண் அசோதையாகவே பாவித்துக் கொண்டார். அந்தப் பாவனையினால் காலத்தால் கண்ணனுக்குப்துவாபரயுகத்துக்கே சென்றார். கண்ணன் கதையில் ஒரு பாத்திரமாக அசோதையாக மாறி அவனைத்தொட்டிலிட்டுத தாலாட்டினார். அவனது திருமேனியழகு கண்டு மகிழ்ந்தார். அவனுக்கு அம்புலி காட்டினார். அவனைக் செங்கீரையாடச் செய்தார்; அவன்கைகளாற் சப்பாணி கொட்டக்கண்டுமனம் களித்தார்; குழல் வாரினார்; பூச்சூட்டினார்; அவன் தளர்நடை நடந்ததும், ஓடிவந்து தழுவிக்கொண்டதும், அப்பூச்சி காட்டியதும் ஆகிய பிள்ளைமைச் செயல்களையெல்லாம் ஒன்றுவிடாமல் கண்டு மகிழ்ந்தார் இங்ஙனம் 'ஒன்றும் பெற்றிலேன்' என்று வருந்திய தேவகிக்கு மாறாக எல்லாம்பெற்று மகிழ்ந்தார் பெரியாழ்வார் 'தொல்லை இன்பத்து இறுதிகண்டாளே' என்று சொல்லும்படி அசோதைக்கு வாய்ந்த எல்லையில்லாத ஆனந்தத்தை அவரும் பெற்றார். பரமபதத்து இன்பத்தைக் காட்டிலும் நூறு மடங்கு பெரிதாயிருந்தது. அவர் பெற்ற கிருஷ்ணாநுபவம் போகத்தில் வழுவாத புதுவையர் கோன் என்று அவரது திருமகளாரான ஆண்டாளும் தம்தந்தையின் பேற்றினை அறுதியிட்டார்ஆழ்வார்க்கு வழுவாது கிடைத்தகோபம் எது தம் தந்தைக்குத் தப்பாது வாய்ந்த இன்பமாக ஆண்ாள் எதைக்கருதினார் வியாக்கியானச் சக்கரவர்த்தி பெரியவாச்சான்பிள்ளை இதற்கு விடையளிக்கிறார் கண்ணனது அவதாரம் தொடங்கி அவனது பிள்ளமை இன்பங்களை ஒன்றுவிடாமல் பாடி அனுபவித்ததையே ஆழ்வாருக்குக் கிடைத்த குறைவற்ற இன்பமாகக் குறிக்கிறார் அவர்.

கிருஷ்ணவதாரத்தில் அசோதைக்கு மகனாய் வளர்ந்ததன் மூலம் அவளுக்கு எல்லையற்ற பேரின்பத்தை விளைத்தான் இறைவன்.இதனை அந்தமில் பேரின்பத்தையும் சிற்றின்பம் ஆக்கினான் எனஎடுத்துக்காட்டுவர் நம்பிள்ளை (ஈடு 8-1-3) அதாவது பரமபத இன்பத்தைக் காட்டிலும் நூறுமடங்கு பெரியதாயிருந்தது அசோதைக்குக் கிடைத்த

கிருஷ்ணாநுபவம் என்பது கருத்து.பெரியாழ்வார் தாமும் தம்மை அசோதையாகப் பாவித்துக் கொண்டதாலே அத்தகையதொரு பேரின்பத்தையே பெற்றார் எனறு கொள்ளத்தடையில்லை.
பெரியாழ்வாரின் கிருஷ்ணாநுபவத்தைப் பெருக்க மதித்துப் போற்றுதற்கு அவரது பாவனா சக்தியே காரணமாகும்மற்றவர்களைப் போலக் கிருஷ்ணாவதார குணங்களை அவர் கரையிலே நின்று சொல்லிப் போகவில்லை கண்ணனின் கதைவெள்ளத்தில் தரை காணுமளவும் மூழ்கி அவர் அனுபவிக்கின்றார் இவ்வகையான அனுபவமே கிருஷ்ணனைப்பாடும் மற்றவர்களிடருந்தும் அவரை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

கிருஷ்ண சரிதங்களைப் பாடியவர்களுள் பராசரர், சுகர் போன்ற மாமுனிவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் முன்னவரின் விஷ்ணுபுராணத்தில் ஐந்தாம் பகுதியில் மட்டுமே கிருஷ்ண சரிதம் இடம்பெற்றது சுகமுனிவரின் பாகவதத்தில் பத்தாவது பிரிவில் மட்டுமே கிருஷ்ணசரிதம் பற்றிப் பேசப்பட்டுள்ளது. ஆனால் பெரியாழ்வாரோ தமது அருளிச்செயலான வெளியிட்டுள்ளார்.அதிலும் குறிப்பாக நெஞ்சை உருக்கும்படி பாலசரித நிகழ்ச்சிகளிலேயே பெரிதும் ஈடபட்டுப் பாசுரமிடுகின்றார்.இப்படி அந்த மாமுனிவர்களும் ஈடுபடவில்லை அன்றியும் அம்முனிவர் இருவரும் கண்ணனின் வரலாற்றைக் கதை சொல்வது போன்றே - கரையில் நின்று விரித்துரைத்தார்கள். பெரியாழ்வாரோ நாம் முன்னர்க் குறிப்பிட்டது போலக் கண்ணனது கதைவெள்ளத்தில் படிந்து குடைந்தாடி பலவகையாக அனுபவித்துப் பாடுகின்றார் கண்ணனை வளர்த்தெடுத்த தாயாக மட்டுமன்றி அவன்மீது மையல் கொண்ட கோபிகையாகவும் அக்கோபிகையின் தாயாகவும் மாறிக் கிருஷ்ண குணாநுபவம் செய்து மகிழ்கிறார்.அதனால் வான்மீகி வியாசர் போன்ற சரித்திரங்களையெல்லாம் ஆழ்வார் தம் மனத்திரையில் காணமுடிந்தது. அத்தகைய காட்சிகளைப்பெரியாழ்வாரது உள்ளத்தல் பிரகாசிக்கும்படி செய்தவன் இறைவன் என்றும் அதற்குக்காரணமாய்அமைந்தது. ஆழ்வாரின் பகவத் பிரேமம்' என்றும் மாணவானமாமுனிகள் விளங்குகின்றார்.

எனவே நாமும் வேண்டுவார்க்கு வேண்டுமுவதை அருளுகின்ற வல்லிபுர மாயவனாம் புருசோத்தமனின் கிருஸ்ணாநுபவத்தில் திளைத்து எம்வாழ்வில் உயர்வடைவோமாக.

"உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமல்
என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி எழுதிக்கொண்டேன்"

"உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர் கலைதான்
உண்டோ பெரியாழ்வாருக்கு ஒப்பு ஒருவர்.

தொகுப்பாக்கம்
புலோலியூர்
வேல்நந்தகுமார் ஆசிரியர்

**பக்தி என்றால் அன்பு.**

அன்பு 3 விதமாக உள்ளது.

I. தன்னிலும் தாழ்ந்த பொருட்கள் மீது ஏற்படும் அன்பு
இது கருணையால் பிறப்பதாகும்.
ஜடப்பொருட்கள், பிராணிகள் ......... மீது பிறப்பவை.

II. தனக்கு சமானமானவற்றின் மீது ஏற்படும் அன்பு
இது நட்பு, உரிமை என்பவற்றால் பிறப்பதாகும்.
நண்பர், உறவினர் .......... மீது பிறப்பவை.

III. தன்னிலும் உயர்ந்தவற்றின் மீது ஏற்படும் அன்பு
இது மரியாதையால் பிறப்பதாகும்
அம்மா, குரு, இறைவன் .......... மீது பிறப்பவை.

**பக்தி என்றால்**

உயர்ந்த இலட்சியம் ஒன்றின் மீது எதுவித எதிர்பார்ப்பும் இன்றி பிரதிபலன் எதுவும் கருதாமல் சுத்தமாக தூய மனத்தோடு செலுத்தப்படும் அன்பே பக்தி ஆகும்.

இது இறைவன் மீதோ, குரு மீதோ, தாய் மீதோ, தேசத்தின் மீதோ வேறு எந்த உயர்ந்தவற்றின் மீதோ இருக்கலாம்.

இறைவன் மீது செலுத்தப்படும் பக்தி 2 வகைப்படுகிறது.

1. நிர்க்குண பக்தி
இறைவனை எல்லாம் வல்லவராக, எங்கும் நிறைந்தவராக, எல்லாம் அறிபவராக ஏற்றுக்கொண்டு சர்வமும் வியாபித்துள்ள அவ் இறைவனின் மீது செலுத்தும் பரிசுத்தமான அன்பு.

2. ஸகுண பக்தி
இறைவனை விரும்பிய ஒரு வடிவில் உருவப்படுத்தி, ஒரு விரும்பிய நாமத்தைச் சூட்டி செலுத்தப்படுகின்ற பரிசுத்தமான அன்பு.

**பக்தி யார் மீது செலுத்த வேண்டும்**

Bhagavad Gita இல் ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா கூறுகிறார்

“உன்னுடைய செயல்கள் அனைத்தையும் என்னிடம் அர்ப்பணித்து, என்பால் பக்தி கொண்டு, என் ஒருவனையே சரணடைவாயாக! பாவங்கள் அனைத்தினின்றும் உன்னை நான் விடுவிப்பேன்”

எனவே இறைவன் மீது முழு மனதுடனும், பூரண விசுவாசத்துடனும் பக்தி செலுத்த வேண்டும்.

**எவ்வாறு பக்தி செய்ய வேண்டும்**

ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மா கூறுகிறார்,

"எல்லா உயிர்களின் உள்ளத்து உறையும் ஆத்மா நானே"

எனவே, அனைத்து உயிர்களிலும் இறைவனைக் கண்டு தரிசிக்க வேண்டும்.

மேலும் கூறுகிறார்,

"எவன் ஒருவன் இலை, மலர், பழம், நீர் இவற்றில் ஏதாவது ஒன்றை பக்தியோடு சமர்ப்பிக்கிறானோ அத்தூய மனத்தானது பக்தியை நான் பெரு விருப்போடு ஏற்றுக்கொள்கிறேன்"

இவ்வாறு மிகவும் எளிமையான வழியை இறைவனே எமக்கு சொல்லித் தருகிறார். தூய்மையான அன்பே மிக மிக முக்கியம்.

உதாரணம்

கண்ணப்ப நாயனார், குசேலர்

பஜனை பாடுதல், நாம ஜெபம் செய்தல் என்பவை பக்தியின் வெளிப்பாடாகும்.

இடைவிடாத நாமஸ்மரணைக்கு பெரிய சக்தி உண்டு.

இறைவனை பலவாறு அலங்கரித்து அழகு பார்ப்பதும், இறைவன் புகழைப் பாடுவதும், இறை அடியார்களிற்கு சேவை செய்வதும் பக்தி நிலையின் ஒருவித வெளிப்பாடே.

உதாரணம்

சபரி

**ஒரு பக்தனுக்கு இருக்க வேண்டிய பண்புகள்**

❖ அனைத்து ஜீவராசிகள், ஜடப்பொருட்கள் என அனைத்திலும் சமனான, எந்தவித எதிர்பார்ப்புமற்று தூய்மையான அன்பைச் செலுத்த வேண்டும். விருப்பு , வெறுப்பற்ற நிலை

❖ இன்சொல் பேச வேண்டும்

துன்பம் தருகின்ற கொடிய சொற்களை விடுத்து இன்பம் தருகின்ற இனிய சொற்களை முகம் மலர்ந்து கூற வேண்டும்

❖ கோபம் , எரிச்சல் போன்ற தீய குண எழுச்சிகள் எவையும் எழக்கூடாது.

❖ இறைவனிடம் பிரதி பலனை எதிர்பாராது அன்பு செலுத்த வேண்டும். கருணைக்கடலான இறைவனிடம் எதையும் யாசிக்கக் கூடாது.

இவ்வாறான உயர் குணங்கள் நிரம்பப் பெற்ற ஒருவனே இறைவனிற்கு மிகவும் பிரியமான பக்தனாகிறான்.

கற்பூரம், ஊதபர்த்தி என்பன தம்மையே உருக்கி (முழுமையாக) ஏனையோரிற்கு ஒளியையும், வாசத்தையும் கொடுக்கிறது. அதேபோல் நாமும் நம்மை இறைவனிற்கு முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும்.

**இறைவன் மீதுள்ள பக்தியை வெளிப்படுத்துவதற்கு பல்வேறு மார்க்கங்கள் உண்டு.**

1)இடை விடாத நாமஸ்மரணை

♦இறைவனின் ஏதாவதொரு புனித நாமத்தை தொடர்ச்சியாக சொல்லிக்கொண்டிருத்தல்.

2)இறைவனின் புகழைக் கூறும் திருமுறைகள், ஸ்தோத்திரங்கள், ஸ்துதிகள் என்பவற்றை பாராயணம் செய்தல்.

♦'தேவாரப் பதிகங்கள்' 7ம் , 8ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றவை.

♦'திருவாசகம்' , 'திருமந்திரம்' என்பவை எவ்வளவோ காலத்திற்கு முற்பட்டவை.

♦இவற்றை பாராயணம் செய்யும்போது அறியாமல், தெரியாமல் தவறு செய்தால், பிழை விட்டால் இறைவன் பெருந்தன்மைளால் மன்னிப்பார்.

3)இறைவனின் திரு நாமங்களைக்கொண்ட பஜனைகளைப் பாடுதல்

♦இது பக்தியின் ஒரு உச்ச நிலையே ஆகும்.

4)கீர்த்தனங்கள் (சங்கீர்த்தனங்கள்) பாடுதல்

♦இதில் உன்னதமான, தூய்மையான இசை மூலம் இறைவனை மகிழ்விக்கின்றோம்.

♦இதன் மூலம் இறைதரிசனம் பெற்றதற்கான சான்றுகளும் உள்ளன. (தியாகராஜ ஸ்வாமிகள்)

5)சுலோகங்கள்

♦இவை மந்திரங்களிற்கு அடுத்தபடியானவை.

♦பகவத் கீதை சுலோகங்கள் போன்றவை அத்தகையன.

♦இவற்றை அவை அவைக்குரிய முறைப்படியே ஜெபிக்க வேண்டும்.

♦எனினும் அரிதாக (தெரியாமல் , அறியாமல்) விடப்படும் சிறு சிறு தவறுகளை இறைவன் கருணை கூர்ந்து ஓரளவு மன்னிப்பார்.

6) மந்திரங்கள் (வேத மந்திரங்கள்)

♦இவை இறைவனால் ஞானிகளிற்கு உள்ளுணர்வு மூலம் உணர்த்தப்பட்டன.

- இவற்றை எல்லாம் வியாசர் தொகுத்தமையால் அவர் 'வேத வியாசர்' எனப்படுகிறார்.
- இறைவனால் அருளிச் செய்யப்பட்ட இந்த மந்திரங்களிற்கு பெரியளவு சக்தி உண்டு.
- இவற்றை அவை அவைக்குரிய முறையில் உச்சரித்தால், உச்சாடணம் செய்தால்தான் பலன் உண்டு.
- பிழையான முறையில் உச்சாடணம் செய்தல் குற்றம் ஆகும். (அது மன்னிக்க முடியாதது).

ஓங்காரம் அனைத்திற்கும் மூலாதாரமான அடிப்படை நாதம்.

சாந்தமான குணம் உடைய நல் ஒழுக்க சீலரே பிராமணர்.
சாந்தமான குணம் உடைய தூய்மையான நல் ஒழுக்க சீலர் எவரும் மந்திரங்களை அவற்றின் ஒழுங்கு முறைப்படி ஓத முடியும்.

ஒரே நாமத்தைத் திரும்பத் திரும்ப ஒரே மாதிரிச் சொல்வது நாமஜெபம். இதில் 3 நிலைகள் உண்டு
1)மிகவும் உரத்துச் சொல்லுதல்
இதன் போது ஏற்படும் அதிர்வினாலேயே நோய்கள் குணமாகும்.
2)சற்று சத்தத்தைக் குறைத்து தனக்கு மட்டும் கேட்கக் கூடியதாக சொல்லல் இதற்கு உரத்துச் சொல்வதிலும்‘ிழறநச கூட.
3) தனக்குக் கூட கேட்காதவாறு மானசீகமாகச் சொல்லல்

இதனை அடுத்த நிலையே தியானம்.
ஒரே நாமத்தைச் சிறிது ஓசை நயத்துடன் திரும்பத் திரும்பப் பாடுதல் நாமஸ்மரணை. இங்கு மனம் லயப்படுவது சுலபம்.

வெவ்வேறு நாமங்களை சங்கதிகளோடு பஜனை போல் பாடுவது நாம சங்கீர்த்தனம். இங்கு மனம் மிக இலகுவாக லயப்படும்.

நமசிவாய : என்னுடையது எதுவும் அல்ல. எல்லாம் சிவனுடையது.
சிவாயநம : சிவனிற்குப் போற்றி.

காயத்திரி
யாழ் பல்கலைக்கழகம்

**பிறர் முதுகுக்கு பின்னால்**
**நாம் செய்ய வேண்டிய வேலை**
**"தட்டிக்கொடுப்பது மட்டும் தான்"**
- விவேகானந்தர் -

# வரம்தரும் வல்லிபுரம்

இலங்கைத் திருநாட்டை அழகு படுத்தும் வைணவ ஆலயங்களில் வல்லிபுரக் கோயிலுக்கு மிக முக்கிய இடமுண்டு. இத் திருத்தலத்தில் குடி கொண்டிருக்கும் மூலமூர்த்தியான சக்கரத்தாழ்வானை அவதார புருஷன் என்று அழைப்பார்கள். அவன் தன்னுடைய அவதார/தசாவதார செயல் நிலைகளில் மிகவும் முக்கியமான தாகவும், ஆரம்பமாகவும் மச்சவதாரத்தையே கொள்ள முடிகின்றது.

மச்சவதாரம் என்பது மச்சம் + அவதாரம் என்பதன் புணர்ந்த வடிவினையே குறித்து நிற்கின்றது. மச்சம் என்பது நீர்நிலைகளில் வாழும் மீன் இனங்களை குறிக்க, அவதாரம் என்பது ஒரு உருவத்திலிருந்து இன்னொரு உருவத்திற்கு மாற்றம் பெறுவது அல்லது காட்சி தருவதனைச் சுட்டி நிற்கின்றது. அத்துடன் ஏதேனும் ஓர் உருவத்தில் தெய்வம் எடுக்கும் பிறப்பு எனவும் இதனைக் கொள்வதற்கு இடமுண்டு.

இவ்வாலயத்தில் புரட்டாதி மாத பௌர்ணமித் தினத்தில் சமுத்திரதீர்த்த உற்சவம் வரும் வகையில் பதினைந்து நாட்கள் முன்பதாக கொடியேற்றப்பெற்று நன்நீர் உற்சவத்துடன் பதினேழு நாட்கள் இத்திருவிழா பெருவிழாவாக இடம்பெறும். பதினெட்டாம் நாள் ஆஞ்சனேயர் மடை செய்யப்படுகின்றது. இத்தினத்தையும் இன்று திருவிழா என்னும் தன்மைக்குள் உள்வாங்கி இறைவன் உலாவரும் வகையில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் மச்சவதாரத்திற்கும் இவ்வாலயத்தின் தோற்றத்திற்கும் பல கர்ணபரம்பரைக் கதைகள்.'. செவிவழிக்கதைகளும் (Verbal Communication) எழுத்துவழி ஊடகங்களும் (Nonverbal Communication) ஊடகங்களும் சான்றாதாரங்களாகக் காணப் படுகின்றன. இதில் மிகவும் முக்கியமானதாக அமைவது தட்சிண கைலாயபுராணம் ஆகும். இதில் பல்வேறு செய்திகள் பொதிந்துள்ளமையினை அதன் உள்ளிறங்கும்போது தெளிவடைய

முடிகின்றது.


வல்லிபுர ஆழ்வார் கோயில் வரலாற்றுக் காலங்களிற்கு முற்பட்டது என்பதனை வரலாற்று ஆதாரங்கள் நிதர்சனமாக்குகின்றன. அதாவது அகழ்வாராய்ச்சிகளின் போது "வல்லிபுர தங்கத்தகடு" ஒன்று கண்டெடுக்கப் பட்டமையும் அது பல நூற்றாண்டுக்கு முற்பட்டது என்றும் பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் கூறியுள்ளார்.

அத்துடன் வல்லிபுரம் என்னும் நகரம் மன்னராட்சிக் காலங்களிலே காணப்பட்ட தலைநகர்ப் பட்டியல்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தலைநகர் என்று கூறுவது. அதன் சிறப்பின் சிகரத்தையே தொட்டுவிடுகின்றது.

இவ்வாலயத்தின் விசேட தினங்களில் ஞாயிற்றுக் கிழமைக்கு தனிச்சிறப்பு உண்டு. ஞாயிற்றுக் கிழமைகளில்த்தான் இவ்வாலயத்தில் சிறப்பான பூஜைகள் ஆராதனைகள் இடம்பெற்று எம்பெருமான் / சக்கரத்தாழ்வான் எழுந்து உள்வீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்மழை பொழிகின்றான். ஞாயிறு என்பது சூரியனைச் சுட்டி நிற்பதுடன் இவ்வழிபாட்டு முறை சூரியவழிபாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதனை இவ்வழிபாட்டுத்தினம் எமக்கு நிலைநிறுத்துகின்றது.

வல்லிபுரத்தானை வணங்கி வல்லமையுடன் வாழ்வோம்.

**வை.நவா**



ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

# அவதாரங்களும் யுகங்களும்

அவதாரங்களில் அற்புதங்கள் ஒவ்வொருகாலகட்டத்திலும் நடைபெறுகின்றது. மஹாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களும்,

கிருதயுகம்
திரேதாயுகம்
துவாபாரயுகம்
கலியுகம்

என நான்கு யுகங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

கிருதயுகம் 1728000 ஆண்டுகளைக் கொண்டது. இதில் வாழ்ந்தவர்களுக்கு வயது இலட்ச வருடம். இடையில் இவர்களுக்கு மரணம் இல்லை. இதில் பாலப்பருவம் பத்தாயிரம் ஆண்டுகளையும், காளைப்பருவம் ஆயிரத்து முப்பத்திரண்டு ஆண்டுகளையும் மிகுதி ஆண்டுகளையும் விருத்தப் பருவத்தினையும் கொண்டமைந்துள்ளன.

திரேதாயுகமும் துவாபாரயுகமும் கிருதாயுகத்தில் பாதியான 864000 ஆண்டுகளைக் கொண்டது. கலியுகம் இதில் பாதியான 432000 ஆண்டுகளைக்கொண்டது. இதில் வாழும் மனிதரின் ஆயுள் நூறு ஆண்டுகளாகவும் எண்சாண் வடிவமாகவும் இருக்கும். இந்தக் காலஅளவின் இடையிலும் இறப்பு ஏற்படலாம்.

தசாவதாரத்தில் முதல் நான்கு அவதாரங்களான மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம அவதாரங்கள் ஆகியன கிருதாயுகத்தில் தோன்றியவை.

பரசுராமனும் இராமரும் கிருதாயுக அவதாரங்களாகவும், பலராமனும், கண்ணனும் துவாபார யுகங்களாக திகழ்கின்றன.

யுகங்களின் கால அளவை 4:2:2:1 என்ற விகிதத்தின் நோக்கின் கிருதயுகம் 1728000 ஆண்டுகளையும், திரேதாயுகம் 864000 ஆண்டுகளையும், துவாபாரயுகம் 864000 ஆண்டுகளையும், கலியுகம் 432000 ஆண்டுகளையும் கொண்டுள்ளது. அவதாரங்களின் தோற்றமும் இதேகால விகிதத்தில் அமைந்திருப்பதனை நோக்கலாம். கிருதயுகம் மச்ச, கூர்ம, வராக, வாமன, நரசிம்ம என்னும் ஐந்து அவதாரங்களையும், கிரேதாயுகம் பரசுராமன், இராமன் என்னும் இரு அவதாரங்களையும், துவாபாரயுகம் பலராமன், கண்ணன் எனும் இரு அவதாரங்களையும் கொண்டமைந்திருப்பதுடன், கலியுகம் கல்கி எனும் அவதாரத்தைக் காணக் காத்திருப்பதனையும் காணலாம்.

பாக்கியநாதன் மணிக்குமார் J.P
கற்கோவளம், பருத்தித்துறை.

# இந்து மதமும் மதமாற்றமும்

போருக்குப் பின்னரான தற்கால சூழலில் இந்துமதத்தின் தொன்மைச் சிறப்பை நிலைநிறுத்துவதில் பல இடர்பாடுகளை எதிர்நோக்கவேண்டியுள்ளன. சனாதன தர்மம் என மேன்மைப்படுத்தி நோக்கப்படும் இந்துமதம், பல்வேறு சவால்களை இன்றைய காலகட்டத்தில் எதிர்நோக்கியுள்ளது. இற்றைக்கு சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த ஐந்தாம்குரவர் எனப் போற்றப்படும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் வேற்றுமதப் பிரச்சாரத்திற்கு எதிராக அவரால் மேற்கொள்ளப்பட்ட துணிச்சலான நடவடிக்கைகளால் அன்றைய காலகட்டத்தில் செல்வாக்கு மிகுந்துவந்த கிறிஸ்தவ மதம் இந்துமதத்தின் மீது ஆதிக்கம் செலுத்துவதிலிருந்து பின்வாங்கியது.

அவரது காலத்தில் அந்நியர் ஆட்சியிலிருந்த இலங்கைத் தீவு பல வழிகளிலும் சுரண்டப்பட்டது. அந்த வகையில் சிறப்புப்பெற்றிருந்த இந்துமதத்தை கருவறுத்து தமது மதத்தை பரப்புவதை நோக்கமாகக் கொண்ட ஆங்கிலேயர்கள் பல்வேறு உபாயங்களை வகுத்தனர். அவ் உபாயங்களைச் செயற்படுத்தவும் முற்பட்டனர். இதனால் இந்துமதத்தின் தொன்மைத் தன்மை கேள்விக்குறியாகும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. இந்நிலை கண்டு சமயவாதிகளும் மக்களும் கவலை கொண்டனர். இந்நிலை கண்டு கொதித்தெழுந்த ஆறுமுகநாவலர் பெருமான் மதத்தீவிரவாதிகளை ஒடுக்கும் செயற்பாடுகளில் இறங்கினார். அவருக்கிருந்த ஞான அறிவும், ஆளுமை விருத்தியும், தெய்வ அனுக்கிரகமும் அம் மதவாதிகளின் பொய்ப்பிரச்சார உத்திகளை வெற்றிகரமாக முறியடிக்க உதவியது. இதன்மூலம் இந்துமதத்தின் உண்மை காப்பாற்றப்பட்டது எனலாம்.

போருக்குப் பின்னரான தற்போதய சூழலில் போரின் தாக்கம் மக்களிடம் தற்போது உணரப்படும் நிலையில் போர் தந்துவிட்டுச்சென்ற எச்சங்களிலிருந்து இன்னும் மக்கள் முற்றாக விடுபடவில்லை. சமூக, பொருளாதார கலாசாரரீதியில் மிகவும் கீழ்நிலையில் இருக்கின்ற மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுகின்றோம் என்ற பீடிகையுடன் செல்லும் குறித்த மதப் பிரிவினர் பல உதவித்திட்டங்களை வழங்கி தமது கபட நோக்கத்தையும் நிறைவேற்றிக் கொள்கின்றனர். தாம் அனுபவித்துவரும் உடல், உள ரீதியான வேதனைக்கு ஆறுதலைத் தேடும் நிலையில் இருக்கின்ற மக்களுக்கு இவர்களின் செயற்பாடு தற்காலிக ஆறுதலை வழங்கினாலும் நீண்டகால நோக்கில் பல பாதிப்புக்களை எதிர்நோக்கவேண்டியவர்களாகவே உள்ளனர்.

இன்றைய சூழ்நிலையைப் பொறுத்தவரையில் இந்துமதத்தின் தொன்மைச்சிறப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டுவரும் நிலையில் பல வேற்றுமதப் பிரிவினரின் இடையறாத பிரச்சாரங்களால் துன்பப்பட்டு

மனம்மாறி, மதம்மாறிச் செல்லும் கீழ்நிலை காணப்படுகின்றது. உலகப்பெரும் மதங்களின் பழமையும் பெருமையும், சிறப்பும் பொருந்திய மதமாகவும் பல கோடி மக்களால் இன்றளவும் பின்பற்றப்பட்டுவரும் இந்துமதத்தின் தன்மையினை உணராத சில வேற்றுமதத்தைச் சேர்ந்த மதவாதிகள் புனிதத்துவம் பெறுகின்ற இந்துமதத்தினை இழிவுபடுத்தி அதனைப் பின்பற்றும் இந்துக்களை வேற்றுமதத்திற்கு பலவந்தமாக கவர்ந்திழுத்து ஈனத்தனமான செயல்களில் ஈடுபட்டுவருவது கண்டிக்கத்தக்கதாகும். தொன்றுதொட்டு இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் பெரும்பான்மையினர் இந்துக்களாகவே இருக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட வீதத்தினர் மட்டுமே வேற்றுமதத்தைப் பின்பற்றுபவராக இருந்தாலும் அவர்கள் பெரும்பாலும் இந்துமதத்திலிருந்து மதம்மாறியவர்களாகவே இருக்கின்றனர்.

தமிழ் மக்களின் தாய்மொழியான தமிழ்மொழியை எவ்வாறு தொன்மை மொழியாக அல்லது செம்மொழியாக ஏற்றுக்கொள்கிறோமோ அதேவகையில் இந்து மதத்தையும் தமிழரின் தொன்மை மதமாக ஏற்றுக்கொள்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள். தமிழ்மக்களைப் பொறுத்தவரையில் சைவமும், தமிழும் இரு கண்கள் எனப் போற்றும் அளவுக்கு சிறப்புத்தன்மை உடையனவாக திகழ்கின்றன.

தொன்றுதொட்டு மக்களால் பின்பற்றப்பட்டுவரும் சமய நெறியாகத் திகழ்வதனால் இந்துசமயத்திற்கு சனாதன தர்மம் என்ற சிறப்புப் பெயரும் வழக்கில் உள்ளது. மற்றைய சமயங்கள் இலங்கைக்கு வருவதற்கு முன்னரே இலங்கையர்கள் எல்லோரும் இந்துக்களாகவே இருந்தார்கள் எனச் சொல்லப்படுகின்றது. திருமந்திரத்தை அருளிய திருமூலநாயனார் கூட இலங்கைத் திருநாட்டை சிவபூமி என இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறப்பித்து அழைத்திருந்தார் என்றால் இந்துமதத்தின் தொன்மை பற்றி அறிய வேறு சான்றாதாரங்கள் இல்லை எனலாம். குறிப்பாக யாழ்ப்பாணத் தீபகற்பமானது எண்ணிறைந்த இந்து ஆலயங்களைக் கொண்டது. பார்க்கும் இடமெங்கும் திருக்கோவில்களாகவே காணப்படுகின்றன. இங்கு காணப்படும் ஆலயங்கள் அனைத்துமே இந்துமதத்தவரின் வரலாறு என்று கூறுவதற்கு அப்பால் தமிழர்களின் வரலாற்றை பறைசாற்றி நிற்குமென்றால் மிகையாகாது.

இன்று எமது மக்களிடம் இந்துமதம் போதிக்கும் தத்துவங்களை சரியாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதால் அல்லது புரிந்துகொள்வதற்கு முற்படாமையினால் இந்துமதக் கோட்பாடுகளை, கிரியைகளை, விழுமியங்களை, அறங்களை சரியான முறையில் அனுஷ்டிப்பதற்கு தவறுகின்றனர். இதனால் பணத்தைக் காட்டியும் சலுகைகளைக் காட்டியும் தம் தாய் மதத்திலிருந்து பிரித்து மதமாற்றம் செய்வது பெற்ற தாயிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து அனாதை

இல்லங்களில் சேர்த்து வளர்ப்பதற்கு ஒப்பானது. சங்கமருவிய காலத்தில் பிற்பகுதியான பல்லவர் காலத்தில் கூட திருநாவுக்கரசு நாயனாரை இந்துமதத்திலிருந்து சமண மதத்திற்கு மாற்றுவதற்கு எவ்வளவோ பாடுபட்டும் இறுதியில் முடியாமல் போன வரலாற்றைப் பார்க்கிறோம். இந்துமதத்திலிருந்து சமண மதத்திற்கு மாற்றுவதற்கு அவருக்குப் பல கொடுமைகள் செய்தாலும் அவரது பக்தி வைராக்கியமும் இந்துமதத்தின்பால் அவர் கொண்ட பற்றுறுதியும் உயர்ஞான செழுமையும் இந்துமதம் தான் மெய்ச்சமயம் என்ற யதார்த்தத்தை வேற்றுமதத்தினருக்கு உணர்த்தினார். இவர்போலவே ஏனைய நாயன்மார்களும், சமயவாதிகளும் தாம் செய்த அற்புதங்கள் வாயிலாக இந்துசமயமே மெய்ச்சமயம் என உணர்த்தினர். ஆறுமுகநாவலர் பெருமான்கூட சைவத்தையும், தமிழையும் வளர்த்த பெரியோர்களில் முதன்மையானவராக விளங்குகிறார்.

தற்காலத்தில் கோவில்கள் கட்டுவதற்கும் கோபுரங்கள் எழுப்புவதற்கும் பல கோடிகளை செலவிடுவதிலும் பார்க்க இந்து மதத்தின் சிறப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்கு பல நலநோன்புத் திட்டங்களை இந்துமதம் சார்ந்த நிறுவனங்கள் நடைமுறைப்படுத்த முன்வரவேண்டும். ஆலயங்கள் என்பது வெறுமனே சமய நிறுவனங்களாக மட்டுமன்றி சமூக நிறுவனங்களாக அதாவது மக்கள் நலப் பணிகளை ஆற்றும் நிறுவனங்களாகத் திகழ வேண்டும். இந்து மதத்தை சார்ந்த ஏழை மக்களின் துயர் துயர்துடைப்பதற்கான நலத் திட்டங்கள், ஏழைச் சிறுவர்களின் குறிப்பாக போரின்போது அனாதரவான பிள்ளைகளின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியூட்டி அவர்களை சமூகத்தில் மதிப்பு மிக்கவர்களாகவும், ஒழுக்கமுடையவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் மாற்றுவதற்கான நடவடிக்கைகளில் சமய வாதிகளும், சமய நிறுவனங்களும் முன்வர வேண்டும்.

எனவே பழம் பெருமைவாய்ந்த இந்துமதத்தை தற்போது கருவறுக்கும் செயற்பாடுகளில் இறங்கியுள்ள வேற்றுமத நிறுவனங்களிலிருந்து நம்மைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் விழிப்புடன் செயற்படவேண்டிய நேரமிது. ஒவ்வொருவரும் நாம் இந்துக்கள் என்ற உயர்ந்த சிந்தனையுடன் ஆன்மிகமாக வாழும் ஒழுக்கங்களும் மிக மிக அவசியமாகும். சச்சரவுகளும், பாதகங்களும், தீமைகளும் பெருகிவரும் இன்றைய காலகட்டத்தில் உள்ளொன்றுவைத்து புறமொன்று கூறி பாமர மக்களை மதம்மாற்றும் செயற்பாடுகளை தடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்.

S.நதிபரன்
நல்லூர்.

# விநாயகரின் திருஅவதாரங்களும் திருவுருவங்களும்

விநாயகரின் திருஅவதாரங்களும் திருவருவங்களும் முப்பத்திரண்டு வகை எகப் புராணங்களும், சிற்ப நூல்களும் குறிப்பிடுகின்றன. அவை பற்றிய சிறு குறிப்பு சக்கரத்தில் -

1.பால கணபதி கைகளில் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம்
இவைகளைத் தரித்திருப்பவர்.

2.தருண கணபதி கைகளில் பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவல்பழம், ஒற்றைத்தந்தம், நெற்றிக்கதிர், கரும்பு இவைகளைத் தரித்திருப்பவர்.

3.பக்த கணபதி கைகளில் தேங்காய், மாம்பழம், வெல்லம், யாபாசம் இவைகளைத் தரித்திருப்பவர்

4.வீர கணபதி வேதாளம், சக்தி ஆயுதம், அம்பு, வில், சக்கராயுதம், கட்வாங்கம், இரும்புலக்கை, கதை, அங்குசம், நாகம் பாசம், சூலம், சூந்தம், மழு, துவஜம் ஆகிய பதினாறு ஆயுதங்களை தரித்திருப்பவர்.

5.சக்தி கணபதி சக்தியை ஆரிங்கனம் செய்துகொண்டு, ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு பாசம், அங்குசம் தரித்திருப்பவர்.

6.த்விஜ கணபதி நான்கு யானை முகங்களுடன் இருப்பவரும், கைகளில் அணிந்திருக்கின்ற ஆபரணங்களைத் தரித்திருப்பவர்.

7.சித்தி கணபதி மாம்பழம், பூங்கொத்து, கரும்பங்கழி, எள்ளுக்கொழுக்கட்டை, மழு தரித்திருப்பவர்.

8.உச்சிஷ்ட கணபதி கைகளில் நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், குன்றிமணி ஜபமாலை இவைகளைத் தரித்திருப்பவர்.

9.விக்ன கணபதி சங்கு, கரும்புவில், புஷ்பபானம், கோடரி, பாசம், சக்கரம், தந்தம், மழு, பூங்கொத்து, அம்பு இவைகளை கையில் தரித்திருப்பவர்.

10.க்ஷிப்பிர கணபதி தந்தம், கல்பவிருக்ஷகிளை, பாசம், ரத்தின கலசம், அங்குசம் இவைகளைத் தரித்திருப்பவர்.

11.ஹேரம்ப கணபதி அபயம், வரதம், பாசம், தந்தம், ஜபமாலை, அங்குசம், கோடரி, முத்கரம், மோதகம், பழம் இவைகளைத் தரித்திருப்பவர்.

12.லக்ஷ்மீ கணபதி கிளி, மாதுளம்பழம், மாணிக்கரத்தின மகுடங்களுடன் கூடிய கலசம், அங்குசம், பாசம், கல்பலதை இவைகளைத் தரித்திருப்பவர்.

சுழலும்....

க.காந்திமதிநாதன்
கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை.

சக்கரம் ஆண்டுச் சிறப்பு இதழுக்கு எம் இனிய வாழ்த்துக்கள்.

# கிருபா லேணர்ஸ்

(அரச அங்கீகாரம் பெற்ற Aதர கனரக
சாரதி பயிற்சிப் பாடசாலை)



## பருத்தித்துறை

1ம் கட்டை சந்தியில் 021 492 3201
071 454 6958
077 722 5292

பெண்களுக்கு நவீன காரில் பயிற்சி வழங்கப்படும்.

**மும்மொழிகளிலும் வாகன பயிற்சி அளிக்கப்படும்**



# KIRUBA LEARNERS

(Govt. Approved Driving Training School)

- குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- எழுத்துப்பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ஞாயிற்றுக் கிழமைகளில் மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) புகைப்படம் என்பவற்றை பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்து தரப்படும்.
- அனுபவம் வாய்ந்த வாகன பயிற்றுனர்களால் வாகனப் பயிற்சிகள் வழங்கப்படும்.
- தாங்கள் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக் கட்டணங்கள்.
- வான், கார், முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், லான்ட்மாஸ்ரர், ரக்டர், பஸ் என்பவற்றுக்கு பயிற்சியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.
- ரெயலில் சித்தியடையத் தவறின் தொடர்பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.



**தலைமைக் காரியாலயம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353
021 492 3200
0777 225292

**எமது கிளைகள்**

சாவகச்சேரி
021 492 3202
021 227 0700


பருத்தித்துறை
021 492 3201

நெல்லியடி
021 300 6550
071 454 6957

கிளிநொச்சி
021 228 5505
071 454 6955

சுன்னாகம்
021 224 2022
071 454 6956

விசுவமடு
021 320 1515
071 454 6955


ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ் 0777917680